ஆவரங்கால் சிவன்கோவில்

# சித்திரத் தேர்

வெள்ளோட்ட விழா மலர்



உ

சிவமயம்

## ஆவரங்கால்
## ஸ்ரீ பர்வதவர்த்தனி சமேத
## நடராஜ ராமலிங்கேஸ்வரர் தேவஸ்தானம்



# சித்திரத்தேர் வெள்ளோட்டச் சிறப்பு மலர்

தொகுப்பாசிரியர்:

**கோப்பாய் - சிவம்**

பதிவு இல.
J/VC/43/CC 695

வெளியீடு:

ஆலய தர்மகர்த்தா சபை,
தேர்த் திருப்பணிச் சபை,

யுவ ஞு ஆனி மீ 14 உ புதன்கிழமை

**28-06-1995**

உ

ஆவரங்கால்

பர்வத வர்த்தனி சமேத நடராஜ ராமலிங்கேஸ்வரர் தேவஸ்தானம்

# தேர்த் திருப்பணிச்சபை உறுப்பினர்கள் விபரம்

## 22-08-1993

தலைவர்: திரு. க. ச. சோமசுந்தரம்

உபதலைவர்: திரு. க. அமிர்தலிங்கம்

இணைச்செயலாளர்கள்: திரு. ப. திபாகராசா
திரு. நீ. மயில்வாகனம்

பொருளாளர்: திரு. க. மனோகரநேரு

உபபொருளாளர்: திரு. பொ. இராஜகோபால்

உறுப்பினர்கள்:


1. திரு. பொ. தெட்சணாமூர்த்தி
2. திரு. க. மயிலு
3. திரு. சி. கிருஸ்ணபிள்ளை
4. திரு. வ. வேலாயுதம்
5. திரு. சி. கணபதிப்பிள்ளை
6. திரு. கா. நடராசா
7. திரு. இ. து. சிவராசா
8. திரு. செ. பாலச்சந்திரன்
9. திரு. வ. சிவானந்தராசா
10. திரு. ந. ஆனந்தராசா
11. திரு. ப. சுந்தரமூர்த்தி
12. திரு. சி. கனகரத்தினம்
13. திரு. கா. யோகராசா
14. திரு. க. முருகையா
15. திரு. த. கந்தசாமி
16. திரு. க. சின்னையா
17. திரு. வை. பொன்னம்பலம்
18. திரு. ஆ. க. துரைசிங்கம்
19. திரு. க. நடேந்திரா
20. திரு. த. ஸ்ரீஸ்கந்தராசா
21. திரு. செ. தவயோகநாதன்
22. திரு. இ. தவராசா
23. திரு. சி. ஸ்ரீ பராபரன்
24. திரு. செ. சுந்தரமூர்த்தி
25. திரு. ச. சண்முகவடிவேலு
26. திரு. அ. தில்லைநாதன்
27. திருமதி. ச. அமிர்தகௌரி

கணக்காய்வாளர்: திரு. அ. சிதம்பரநாதன்

உ
சிவமயம்

# கோபுர தரிசனம்

திருச்சிற்றம்பலம்



திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சகக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

மண்ணி னல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணி னல்லகதிக்கு யாதுமோர் குறைவில்லை
சுண்ணி னல்லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணி னல்லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

கல்லாப் பிழையும் கருதாப்பிழையும் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப்பிழையும் நின்னைந்தெழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப்பிழையும் தொழாப்பிழையும்.
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சிஏகம்பனே.

வான்முகில் வழாது பெய்க மலிவளம்சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

பொது நூலகமும் சனசமூக நிலையமும்
பதிவு இல.
JVC/43/CC 695

உ
சிவமயம்

# கோபுர வாசல்

" ஆலயந் தானும் அரனெனத் தொழுமே " என்பது சிவஞானபோதம். ஆலயம் அமைத்தலும் வழிபாடாற்றலும் இந்துக்களின் வாழ்க்கையோடிணைந்த முக்கிய அம்சங்களாம்.

ஆலய அமைப்பும் அங்கு நிகழும் மரபுவழிப்பட்ட கிரியை வழிபாடுகளும் விழாக்களும், எமது கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களையும் பேணிவருகின்றன.

நித்திய, நைமித்திக, காமியக் கிரியைகள் பற்றி சிவகாமங்கள் சிறப்பாக எடுத்துக் கூறுகின்றன. நைமித்திகங்களில் மஹோற்சவம் முக்கியமானது.

மஹோற்சவத்தின் முக்கிய அம்சமான இரதோற்சவமானது, தத்துவ உட்செறிவும் பக்திமேம்பாடும் கலைபண்பாட்டு மேன்மையும் கொண்டமைவது.

ஆவரங்கால் சிவன் தேவஸ்தானத்தில் நீண்டகாலமாக மஹோற்சவம் நடைபெற்று வருகின்ற போதிலும் இங்கு ஒரு சித்திரத்தேர் இல்லையென்ற குறை அடியார்களுக்கிருந்தது. பீடம் வரையில் மரத்தால் அமைக்கப்பெற்று மேலே கட்டுத்தேராக உடனமைக்கப்படும் தேரே இதுவரை பாவனையிலிருந்தது.

இறையருள் கைகூட்ட அடியார்களின் நல்லாதரவினால் இப்போது புதிய சித்திரத் தேரொன்று உருவாகிவிட்டது. யுவ வருடம் ஆனிமாதம் நடைபெறும் மஹோற்சவத்தின் போது ஆவரங்கால் பர்வதவர்த்தனி சமேத நடராஜ ராமலிங்கேஸ்வரர் புத்தம் புதிய சித்திரத் தேரேறி அருட்காட்சிதருகின்றார்.

சிற்பக் கலாநிதி ஆ. சீவரத்தினம் அவர்களின் வழிகாட்டலில் அவரது புதல்வர் சீ. ஜெயப்பிரகாஷ் அவர்களினால் உருவாக்கப்பட்ட புதிய தேரின் வெள்ளோட்ட விழா இன்று நடைபெறுகிறது.

இவ் விழாவை என்றும் நினைவில் இருத்துவதற் கேதுவாகவும், இவ் விழாவோடு தொடர்பாக நல்ல ஆன்மீக சிந்தனைகளை அகத்திற் பதிப்பதற்கேதுவாகவும் தேர் வெள்ளோட்ட மலர் ஒன்றை வெளியிட வேண்டுமென்ற நல்லெண்ணம் அன்பர்களிடையே தோன்றியது. அதன்பயனாக இம்மலர் உங்கள் கைகளில் மலர்ந்து பக்தி மணம் வீசுகிறது.

நல்லறிஞர்கள் சிலர் நற்கருத்துக்கள் பலவற்றை இதன் மூலம் தருகின்றனர். அடியார் உள்ளங்களில் அவை அறிவுச் சுடரேற்றுமென நம்புகிறோம்.

மலருக்குக் கட்டுரைகள் வழங்கியும், ஆலோசனைகள், அறிவுரைகள் வழங்கியும் ஆதரவு நல்கிய பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் அவர்கள், பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்கள், கலாநிதி நா. சுப்பிரமணியஐயர் அவர்கள் வித்துவான் க. சொக்கலிங்கம் எம். ஏ. அவர்கள் ஆகியோர் எமது நன்றிக்குரியவர்கள்.

ஆசியுரைகள், வாழ்த்துரைகள் வழங்கிய நல்லைக்குருமணி அவர்கள், துர்க்கா துரந்தரி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் ஆலய பிரதமகுரு அவர்கள், யாழ். பல்கலைக்கழக சம்ஸ்கிருதத்துறைத் தலைவர் பேராசிரியர் வி. சிவசாமி அவர்கள், நீர்வேலிக் கந்தசுவாமி கோவில் பிரதமகுரு சுவாமிநாத ராஜேந்திரக் குருக்கள் ஆகியோருக்கு எமது பணிவான வணக்கங்கள்.

மலரை நன்கு உருவாக்கி வழங்கிய அச்சகத்தினருக்கும், ஓவிய அமைப்பாளர்களுக்கும், புகைப்படங்களை அழகிய முறையில் பதிப்பித்துதவியவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்து மலரை நுகர்வதற்குப் பணிவன்போடு அழைக்கின்றோம்.

—மலராசிரியர்

*1995-06-28*

உ

குருபாதம்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

# ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள் வழங்கிய அருளுரை

அருளோங்கும் சைவ மெய்யன்பர்களே.

ஆவரங்கால் ஸ்ரீசிவபெருமானுக்குப் புதிய சித்திரத்தேர் அமைத்து வெள்ளோட்ட விழா எடுக்கவிருப்பதை அறிந்து பெரிதும் மகிழ்வுறுகிறோம்.

எல்லாம் வல்ல பரம்பொருளான சிவபெருமானுக்கு நாமாற்றும் கைங்கரியங்களின் மகிமை, பெருமை விளக்கற்கரிது. விழாக்களில் முதலிடம் பெறுவது இரதோற்சவம்.

நிலையிலா வாழ்க்கையைத் தேர்ந்துகொள் என்பது தேர் என்ற சொல்லின் பொருள். பிரபஞ்சத்தையே தேராக உருவகப்படுத்தி மேல் விதானத்தில் ஆறு ஆதாரங்களும் கீழ் தளத்தில் மானுடப்பிறப்பு, இறப்பு வரை சித்தரிக்கும் சிற்பங்களும், மூலமூர்த்தியின் புராண வரலாறுகளும் சிற்பங்களாக அமைக்கப் பெறும். ஆக அடியில் ஆமை உருவம். இதன் தத்துவங்களை நுண்ணியது. விளக்கப்புகின் மிக விரியும். எனினும், அன்பர்கள் ஓரளவேனும் அறிந்து கொள்ள வேண்டும்.

இதனை உருவாக்கிய ஸ்தபதியார்களையும், நிதியுதவி ஈய்ந்தும் மற்றும் எல்லா வகையாலும் தொண்டுகள் புரியும் அன்பர்களையும் பாராட்டிப் பரம்பொருளின் திருவருளை உளமார வேண்டி எல்லோருக்கும் எமது மனப்பூர்வமான நல்லாசிகளை வழங்குகிறோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்,
யாழ்ப்பாணம்.
1995-06-28.

— ஸ்ரீலஸ்ரீ குருமஹா சந்நிதானம்

பதிவு இல.
JIVC/43/CC 695

ஆவரங்கால் சிவன்கோவில் பிரதமகுரு

# சிவஸ்ரீ வே. நடராஜக்குருக்கள் அவர்களின் ஆசியுரை

''தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்
சாற்றிடும் அங்கியிலே சங்காரம் — ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தே உற்ற திரோதம் முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு'' என்னும் வெண்பா.

நடராஜப் பெருமானது திருவுருவில் ஐந்தொழிலும் அடங்கியமையைக் காட்டும். ஆலயங்களில் நடைபெறும் மஹோற்சவத்தின் உட்பொருளும் பஞ்சகிருத்தியம் பற்றிய விளக்கமே கொடியேற்றம் சிருட்டியையும், அடுத்துவரும் வாகனோற்சவங்கள் காத்தல் மறைத்தலையும், தேர்த்திருவிழா அழித்தலையும், தீர்த்தம் அருளலையும் குறிக்கும் என்பர். இத்திருவிழாக்கள் அனைத்திலும் பெரிதும் சிறப்பாகக் கருதிப் போற்றப் படுவது தேர்த்திருவிழாவே.

ஆணவம், கன்மம், மாயையாகிய மும்மலங்களுள்ளே சிறைப்பட்டு வருந்தும் சீவர்களுக்கு அருளும்பொருட்டு இறைவன் மும்மலங்களாகிய முப்புரங்களையும் எரித்து உய்தியை வேண்டிய மூவகை ஆன்மாக்களையும் தமது திருவடியிலே சேர்த்தலாகிய முத்தியைப்பெறச் செய்கிறார் என்பதைத் திருமுறைப்பாடல்கள் பல எடுத்துக்காட்டுகின்றன. இத்தத்துவத்தையே தேர்த்திருவிழாவும் குறித்து நிற்கிறது.

சில ஆண்டுகளுக்குமுன் புனருத்தாரணத் திருப்பணிகளால் முற்றிலும் புதிய கோயிலாகிக் கும்பாபிஷேகம் செய்யப்பெற்ற வருடாந்த உற்சவங்களும் கிரமமாக நிகழ்ந்து வரும் ஆவரங்காற் சிவன்கோயிலில் சுவாமி பழைய தேரில் உலாவருதை நினைந்து நெஞ்சு பொறுக்காத சிவபக்தர்கள் யாவரும் சேர்ந்து சிவனுக்கு ஒரு புதிய சித்திரத் தேரை உருவாக்கியுள்ளனர்.

இத் தேர்த்திருப்பணிக்கு நிதியுதவி செய்தவர்களும் திருப்பணிச் சபையினரும் வேறும் பலவகையில் உதவியவர்களும், தேர்த்திருப்பணியை நிறைவாக்கிய ஆசாரியர்களும், தேர்த்திருப்பணிக்கு மலருக்கு ஆக்கங்கள் வழங்கியுள்ளோரும், விழாவைத் தரிசிப்போரும் ஆகிய யாவருக்கும் பர்வத வர்த்தனி அம்மை சமேத நடராஜ ராமலிங்கப் பெருமான் பேரருள் புரிவாராக.

— வே. நடராஜக்குருக்கள்

ஆவரங்கால் சிவன்கோவில்,
புத்தூர்.
*1995-06-28.*

நீர்வேலி கந்தசுவாமி கோயில் பிரதமகுரு

# சிவஸ்ரீ சுவாமிநாத இராஜேந்திரக்குருக்கள்

## வழங்கிய ஆசியுரை

ஆவரங்கால் சிவன் கோயில் வெள்ளோட்டவிழா நடப்பதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். ஆலயத்தின் அருட்பொலிவை அதிகரிக்கச் செய்யும் மஹோற்சவத்திலே இரதோற்சவம் மிகமுக்கியமானதாகும். ஆலயமே அசைந்து வருவது போல அன்பர்களை நாடி அருள்தர இறைவன் தேரேறி வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். அத்தகைய பெருவிழாவுக்குகந்த புதிய சித்திரத்தேர் இப்போது அமைக்கப்பட்டிருப்பது சாலவும் பொருத்தமானதே.

ஊர்கூடித் தேரிழுக்கும் உத்தமப் பெருவிழா ஒற்றுமையின் சின்னம். இறைவனின் அருட்செயல்களையும் உலகியல் வாழ்வையும் ஒருங்கே சித்தரிக்கும் இத்தேர் மக்கள் மனங்களில் நல்லுணர்வைத் தோற்றுவிக்கட்டும்.

இவ்விழாவையொட்டிச் சிறப்புமலர் வெளியிடுவதும் சிறந்தவொரு கைங்கரியமாகும். பலர் நல்லறிவு பெறுதற்கு மலர் உதவட்டும்.

இத்திருப்பணியிலே ஈடுபட்டுப் பொருளுதவி, ஆதரவு வழங்கிய அன்பர்களுக்கும், மலர் வெளியீட்டிற்கு ஆக்கங்கள் வழங்கியவர்களுக்கும், இவ்விழாக்களில் கலந்துகொள்ளும் அடியார்களுக்கும் சகல சௌபாக்கியங்களும் கிட்ட வேண்டுமென எல்லாம் வல்ல வள்ளி தெய்வானை சமேத சண்முகநாதப் பெருமானைப் பிரார்த்தித்து எமது நல்லாசிகளை வழங்குகின்றோம்.

நீர்வேலி கந்தசுவாமி கோயில்,
நீர்வேலி.
1965-06-28.

— சு. இராஜேந்திரக்குருக்கள்

JVC/43/CC 565

உ

தெல்லிப்பழை துர்க்கையம்மன் தேவஸ்தானத் தலைவர்

# சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வழங்கிய வாழ்த்துரை

ஆவரங்கால் என்றதும் அங்கு அருள் பாலிக்கும் சிவனது திருவருட் பெருமைதான் அனைத்துச் சைவ மக்களின் உள்ளங்களிலும் இடம்பெறும் ஆத்மீக உணர்வாகும். இராமலிங்கேஸ்வரப் பெருமான் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அற்புதமான ஆலயம் இதுவாகும். சில ஆண்டுகளுக்கு முன்பு இங்கு வெகு சிறப்பாக குடமுழுக்குவிழ நடைபெற்று மேலும் புதுப்பொலிவு பெற்று விளங்குகின்றது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாக அமைந்த இவ்வாலயத்துக்கு இன்று சித்திரத்தேர் ஒன்றும் உருவாக்கப்பட்டிருப்பது உவகை தரும் நிகழ்வாகும். சிற்பச்சக்கரவர்த்தி சீவரத்தினம் அவர்களின் புதல்வர் ஜெயப்பிரகாஷ் அவர்கள் தனது நிறைவான அனுபவங்களை வைத்துக்கொண்டு இப்பணியை நிறைவேற்றியுள்ளார். ஆலய பரிபாலன சபையும் இவ்வூர்ச் சைவபிமானிகளும் திருப்பணிகளுக்கு அள்ளி வழங்கும் வள்ளல்களும் ஒன்றுபட்டு இவ்வற்புதமான சித்திரத்தேரை உருவாக்கி வெள்ளோட்டம் காண்கின்றனர்.

மகோற்சவத்தின் சிறப்புக்குரிய இரதோற்சவம் சங்காரத் தொழிலை உணர்த்துவதாகும். இது பஞ்ச கிருத்தியங்களில் உயர்ந்தது. தீயவற்றை மாய்த்து நல்லவற்றை நிலைபெறச் செய்வது இறைவனின் கருணை விளையாட்டாகும். மும்மலங்களை அடக்கித் திருவருள் வெளிப்பாட்டை மேலெழச் செய்யும்நிலை சங்காரத் தொழிலுக்கு உண்டு.

''முப்புரம் செற்றனர் என்பர்கள் மூடர்கள்''
முப்புரம் என்பது மும்மல காரியம்''

என்பது திருமந்திரம் இறைவன் சங்கார மூர்த்தியாக இரதத்தில் இருந்து திரிபுரசங்காரம் செய்து தீயவற்றை அழித்துவிட்டு சாந்த மூர்த்தியாக இருப்பிடத்தை அடைகின்ற காட்சி தேர்த்திருவிழாவிலன்று நாம் காணும் தெய்வீகக் காட்சியாகும்.

சிவபரம் பொருளின் திருநாமங்களில் ஒன்று திரிபுரம் எரித்த விரிசடைக்கடவுள் என்பது வித்தியுன் மாலி என்போரை அடக்கி அனைத்து ஜீவராசிகளையும் இரட்சித்தான் இறைவன் என்பது புராண வரலாறு. தேர் உற்சவம் இந்த வகையில் இடம் பெறுகிறது.

எனவே மகோற்சவத்தில் சிறந்ததாகிய இரதோற்சவத்துக்கு இன்றியமையாது அமைய வேண்டிய தேர்த்திருப் பணியில் ஈடுபாடு கொண்டு ஆதரவு வழங்கிய அனைவருக்கும் எமது வாழ்த்தும் வணக்கமும் உரித்தாகுக.

துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை
1995-06-28

—தங்கம்மா அப்பாக்குட்டி
தலைவர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறைத் தலைவர்

# பேராசிரியர் வி. சிவசாமி வழங்கியுள்ள வாழ்த்துரை

ஆவரங்கால் சிவன் கோவிலில் எழுந்தருளி அனைவருக்கும் அருள்பாலிக்கும் அன்னை ஸ்ரீபர்வதவர்த்தனி சமேத நடராஜ ராமலிங்கேஸ்வரப் பெருமானுக்குச் சித்திரத்தேர் உருவாக்கப்பட்டுள்ளமை குறித்து மிக மகிழ்ச்சியடைகிறேன். இவ்வருங்கலை வடிவத்தின் உருவாக்கத்திற்கு உழைத்தோர் அனைவரும் நன்கு பாராட்டுக்குரியவர்.

இந்துக் கோவில் வழிபாட்டிடமாக மட்டுமன்றிக் கலைகளின் இருப்பிடமாகவும், கலைவளர்க்கும் சமூகநிறுவனமாகவும் விளங்கி வந்துள்ளது. இறைவனே கலைவடிவமாகவும், கலைகளின் மிகச்சிறந்த ஆசானாகவும் விளங்குகின்றான். இவ்வகையிலே இறைவன் பவனி வரும் தேரும் குறிப்பாகச் சித்திரத்தேரும் சமயம், ஆன்மீகம் ஆகியவற்றை மட்டுமன்றிக் கவின்கலைகளைப் பிரதிபலிக்கும் கலை ஆக்கமாகவும் இலங்குகின்றது.

அஞ்ஞானம், அறியாமை, பாவமாகியனவற்றில் அமிழ்ந்தித் தத்தளித்துக் கொண்டு உழலும் ஆன்மாக்கள் இறைவனின் திருவருளினாலேதான் ஈடேற்றம் அடைகின்றன, இவ்வகையிலே இறைவனுடைய ஐந்தொழில்களான படைத்தல் காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகியவற்றினைக் குறியீடாகக் கொண்டு உள்ள மஹோற்சவத்திலே தேர்த்திருவிழா அழித்தலை (சம்ஹாரத்தினை)க் குறிக்கும். ஆன்மாக்களைப் பீடித்துள்ள ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் அழிப்பதாகிய சம்ஹாரத்தினைச் செய்தற்காக இறைவன், திருவருள் ஆகிய தேவியுடன் சித்திரத்தேரிலே எழுந்தருளுதல் எல்லா வகையிலும் நன்மை பயக்கும் திருவருட் செயலே. யாவர்க்கும்பேரரசியாகவும். பேரரசனாகவும் விளங்கும் அம்மை, அப்பராகிய இறைவனும், இறைவியும்; மன்னருக்குரிய முறையிலே, தேரிலே எழுந்தருளி வீதி வலம் வந்து ஆன்மாக்களுக்கு ஈடேற்றம் செய்கின்றனர்.

இறைவன் வீதிவருதல்மூலம்ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்கான தனு, கரண, புவன போகங்களைத் தோற்றுவிக்கின்றான். அனைவருக்கும் பொதுவான தீஷை (தீஷைபெறாதவர்களுக்கும், ஏனையோருக்குமான சாம்பவ தீஷை இங்கு திருக்கடைக்கண் பார்வை) யினை அளித்து அனைவரையும் ஈடேற்றுகின்றான். அதுவும் சித்திரத்தேரிலே அவர் வலம் வந்தருளும் சிறப்பினை வர்ணிக்க முடியுமா? எனவே இப்பெயர்ப்பட்ட பெரிய தொண்டினைச் செய்துள்ள அனைவரும் பெரிதும் பாராட்டுக்குரியவரே. பல்லாண்டுகளாகப்பதட்டத்தினாலும் அமைதியின்மையாலும் அல்லலுறும் எம்மக்களுக்கு எம்பெருமானும், பிராட்டியும் திருவருள் பாலித்துக்காப்பாற்றுவாராக!

எல்லா மக்களும் இன்புற்றிருப்பார்ாக.
(ஸர்வே ஜனாஹ ஸுகிநோபவந்து)
எல்லா மங்களங்களும் உண்டாவதாக
(ஸமஸ்த மங்கலானிபவந்து)

—வி. சிவசாமி

சம்ஸ்கிருதத்துறை
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
28-06-1995.

பதிவு இல.
JVC/43/CC 695

# தமிழறிஞர் க. சொக்கலிங்கம் M. A. அவர்களின்

## வணக்க உரை

ஆவரங்கால் நான் பிறந்த ஊர். அந்தமண் என் சொந்தமண். ஆனால் அந்த மண்ணிலே ஓராண்டுக்குமேல் உருண்டு புரளும் பேறு எனக்குக் கிட்டவில்லை. வறுமை துரத்த நானும் என் அன்னையும் யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணையிற் குடிபுகுந்தோம். எனது பதினெட்டாம் வயதிலிருந்து நாயன்மார்கட்டில் வதிந்து வருகிறேன்.

கடற்கரைத் தாளங்காய் போல அலைப்புண்டாலும், என் உற்றார் உறவினரின் வேர்கள் ஒரு காலத்தில் அங்கிருந்தன. இன்று அந்த வேர்களும் அறுந்து போயின. என் செய்வது? எனையாளும் ஈசன் செயல்.

1943 ஆம் ஆண்டில் இரண்டாம் உலகப்போர் உக்கிரமடைந்த வேளையில் ஒரு மாதம், ஆவரங்கால் எங்களுக்குப் புகல் அளித்தது.

அந்த நாள்களில் ஆவரங்கால் நடராசராமலிங்கேஸ்வரரின் ஆலய மண்டபத்திலே தனிமையிலிருந்து இனிமை கண்டதெல்லாம் இன்றும் நெஞ்சில் இனிக்கின்றன. பெருமானின் சந்நிதி முன்பு ஆழ்ந்த பேரமைதியோடு பச்சைக்கம்பளம் விரித்தாற் போன்று பரந்து கிடந்த கழனிகளும் தோட்டங்களும் மனக்கண்ணில் பவனிவருகின்றன. ''அந்தநாளும் வந்திடாதோ'' என்ற ஏக்கம் என்றும் எனக்குண்டு.

''நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்''' என்ற அமுதமொழிக்கு நான் பொருளினை உணர்ந்து கொண்டது, 1982 ஆம் ஆண்டிலாகும். ''ஸ்ரீபர்வத வர்த்தனி சமேத நடராசராமலிங்கேஸ்வரர் சுவாமி ஆலயகும்பாபிடேக மலரின்'' ஆசிரியப் பணியை ஆலய தருமகர்த்தா சபையினர் எனக்கு வழங்கியமை, நான் முற்றிலும் எதிர்பாராதது. அச்சபையார் எனக்கு நன்றி செலுத்தினாலும், கரும்புதின்னக் கைக்கூலிதந்த அவர்களின் அன்புக்கு நானன்றோ நன்றி செலுத்த வேண்டும்?

இவ்வேளையில் எனது நெஞ்சிலே பொங்கியெழும் நன்றிப் பெருக்கினை,

ஆவரங்கால் ராம லிங்கர்க்கும் அடியேன்

அவரருளிற் றிணைக்கின்ற அடியார்க்கும் அடியேன் என்று சிரம்தாழ்த்தி வணங்குவதன் மூலம் வெளிப்படுத்துகின்றேன்.

சிற்பத் திறமையடைந்த சீரார் திருத்தேரில்
அற்புதனாம் எம்பெருமான் அன்னையுடன் - கற்பகமாய்
வேண்டுவார் வேண்டும் விழைவெல்லாம் ஈந்தருளல்
காண்பாரின் கண்களே கண்.

ஸ்ரீ பர்வத வர்த்தனி சமேத ராமலிங்க சுவாமியின் பாதார விந்தங்களைப் பரவிப் பணிகின்றேன்.

எல்லோரும் வாழ்க!

இன்பமே சூழ்க!

க. சொக்கலிங்கம்
(சொக்கன்)

நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.
1995-06-28.

உ

# வாழ்த்தும் வணக்க உரையும்

''செல்வன்கழலேத்தும் செல்வம் செல்வமே'' ( சம்பந்தர் )

''சிவன்எனும் நாமம் தனக்கேஉரிய செம்மேனி அம்மான்
அவன் எமை ஆட்கொண்டு அருளிடும்''

''பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப்போகமும் திருவும்புணர்ப்பானை''
( அப்பர் )

''அழிளாதொழியான் நமக்கு'' ( மணிவாசகர் )

* இவை தமிழ்வேதம், சாசுவதமானவை.
* 1967 இல் பாலஸ்தாபனம். 1982 இல் குடமுழுக்கு. இடையில் பதினான்கு ஆண்டுகள். ஆவரங்கால் மக்கள் அருந்தவம். பயன் பெருஞ்சாந்தி விழாக்கண்டோம். மனதுக்குப்பெருஞ்சாந்தி.
* 1982 இன் பின் 1995 வரை பதின்மூன்று ஆண்டுகள் மீண்டும் ஆவரங்கால் மக்கள் தவம். பயன் புதிய சித்திரத்தேர்.
* 28-6-95 புதன்கிழமை பெருமானுக்கே உரிய திருவாதிரைநாளில் தேர் வெள்ளோட்டம் நடைபெற அருளுகின்றார்.
* தேர் உருவாக்க உள்ஞரிலும் வெளியூரிலும் வெளிநாட்டிலுமிருந்து அன்பர்கள் பலரும் நிதியுதவினார்.
* தேர்த்திருப்பணிச் சபையினர் பொருள் சேர்த்துத் திருப்பணியை இனிது நிறைவேற்றினர்.
* திருநெல்வேலிச் சிற்பச் சக்கரவர்த்தி ஆ. ஜீவரத்தினம் வழிநடத்த அவர் மகன் ஜீ. ஜெயப்பிரகாஷ் ( சிற்பப்பிரகாசம் ) அவர்கள் தேரை உருவாக்கினார். சிற்பர் பலர் சேர்ந்துழைத்தார்.
* எல்லாருடைய ஒத்துழைப்பாலும் எல்லாம் வல்ல எம்பெருமானின் திருவருளாலும் தேர் தேராயிற்று.
* பதினான்கு வருடத்தவம் இராமராச்சியம். பதின்மூன்று வருடந் தவம் தர்மராச்சியம் சேர்ந்த இருபத்தியேழு வருடத்தவம் எங்கள் இராச்சியமாகும். நல்லரசு நடக்க நலமெலாம் பெருகுக.
* நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும் மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும் மன்றாடும் மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமை குன்றாத உணர்வுடையார் தொண்டராம் குணமிக்கார்.
என்ற அருண்மொழிப்படி இறைபணியில் விடாமுயற்சியோடு ஈடுபட்டுத்திருப்பணியை நிறைவாகக்கண்டு மனச்சாந்தி பெற்றும் பெறவைத்தும் நிற்போர் பெரியர்.
* இவர்கள் எல்லோரதும் இணையடி எந்தலைமேலன. நன்றி இவர்கள் யாவருக்கும் எம்பிரான் திருவருள் பூரணமாக அமைக.
* திருவருட் செல்வனின் திருப்பணியில் ஈடுபடுவோர்க்கு அவன் செல்வமாக வளர்த்திடுவான்.

ஊரும் உலகும் இனிது வாழ்க. சுபம். மங்களம்.

— ஆவரங்காற்சிவன் தேவஸ்தான
தர்மகர்த்தா சபையினர்

ஆவரங்கால்,
புத்தூர.
1995-06-28.

உ

சிவமயம்

# நலம் மலியட்டும்

''என்னிலும் இனியார் எவரும் இலர்
என்னிலும் இனியான் ஒருவன் உளன்
அன்னவன் அகந்தோறு அமர்ந்தாட்சி செய்
மன்னன் கொய்வகை மாதொரு கடறனே''

என்றபடி எம்மிலும் எமக்கு இனியராய் எல்லோருடைய இதயங்களிலும் இருந்து இறைமை செய்பவர் பரமேஸ்வரன் கொய்வளைப்பதியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீபர்வத வர்த்தனியம்மை சமேத ஸ்ரீ நடராஜராமலிங்கப் பெருமான் ஒருவரே.

அப்பெருமானது சிவாலயப் புனருத்தாரண திருப்பணிச்சபையிலும் இத்தேர்த் திருப்பணிச்சபையிலும் என்னையே தலைவராக அங்கீகரித்துப் பணியாற்ற வேண்டிக் கொண்ட ஊர்ப்பெருமக்களுக்கு மனங்கனிந்த நன்றி.

எல்லாவகையிலும் ஒத்துழைப்பு நல்கித்தேர்த்திருப்பணி செவ்வனே நிறைவுற ஊக்கிய சபை உறுப்பினர்களுக்கு நன்றிகள் பல.

நிதியுதவிய சீரியோர்க்கும் உரிய காலத்தில் திறம்படத் தேரை உருவாக்கித் தம் கைவண்ணத்தைக் காட்டிய சிற்பாச்சாரியர்களுக்கும், மற்றும் பலவகையிலுதவியவர்களுக்கும் நன்றிகள் பல.

இவர்கள் யாவர்க்கும் ராமலிங்கேஸ்வரர் திருவருளைப் பரிபூரணமாகப் பாலிப்பாராக.

எல்லோரும் இனிது வாழ்க. என்றும் இன்பம் பெருகுக.

சிவனருளால் சித்திரத்தேர் வெள்ளோட்டம் சிறப்புறுக.
நலம் மலிய நாடு வாழ்க.

— ச. சோமசுந்தரம்
தலைவர்
தேர்த்திருப்பணிச் சபை.

ஆவரங்கால், புத்தூர்.

# பிரார்த்தனை உரை

ஆவரங்கால் கொய்வளையம்பதி அருள்மிகு ஸ்ரீபர்வதவர்த்தினி சமேத நடராஜ ராமலிங்கேஸ்வரர் தேவஸ்தானத்தில் இதுவரை பண்டைய முறையிலான கட்டுத்தேரினிலே எம்பெருமான் பவனி வந்து அநுக்கிரகம் பாலித்து வந்தார்.

1995 ம் ஆண்டு உற்சவ காலத்தில் புதிய எண்கோண வடிவான சித்திரசிற்பங்கள் பொறிக்கப்பட்டதும், பாரிய குதிரைகள் இணைக்கப்பட்டதுமான தேரில் அம்மை அப்பன் வீதியுலா வந்து அடியார்களுக்கு அருள் பாலிக்க வேண்டுமென இறையருள் கைகூடியதால் புதிய சித்திரத்தேர் பூர்த்தியெய்தி 1995-06-28 புதன்கிழமை திருவாதிரை நன்நாளில் காலை 8.45 - 9.50 மணி வரையான சுபநேரத்தில் வெள்ளோட்ட நிகழ்வு இனிது நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் அருள்மிகு நிகழ்வில் அடியார்கள் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டிநிற்கின்றோம்.

புதிய சித்திரத்தேர் உருவமைக்கும் பணிக்கென சித்திரத்தேர்த் திருப்பணிச்சபை உருவாக்கப்பட்டு துரிதகதியில் செயற்பட்டு இப்பாரிய பணி நிறைவேற்றப்பட்டுள்ளது.

உத்தேசமாக சுமார் 14 லட்சம் ரூபா வரைமதிப்பிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட பாரிய புதிய சித்திரத்தேர் உருவமைக்க ஆவரங்கால் மக்களும் அண்டைய கிராம மக்களும் தமது மனமார நிதியுதவி புரிந்ததாலும், இக்கிராம, அயற்கிராம மக்களைச் சார்ந்த வெளிநாட்டு உழைப்பாளர்களின் பாரிய பங்களிப்பாலும் இத்தேர் உருவானது.

திருநெல்வேலியைச் சேர்ந்த சிற்பாசாரியார் சிற்பச்சக்கரவர்த்தி ஸ்தபதி ஆறுமுகம்—சிவரத்தினம் அவர்களின் மேற்பார்வையில் அவரது புதல்வன் திரு. ஜீவரத்தினம் ஜெய பிரகாஷ் தலைமையில் உருவாகிய முதலாவது தேராக அமையும் இத்தேர் எல்லாச் சிறப்புகளும் பொருந்தியதாக அமைந்து எல்லோருக்கும் மங்களங்களைச் செய்யப்பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ பர்வதவர்த்தனி சமேத
நடராஜ ராமலிங்கேஸ்வரர் தேவஸ்தானம்,
ஆவரங்கால்.

ப. தியாகராசா
நீ. மயில்வாகனம்
இணைச்செயலாளர்

உ
சிவமயம்

தேர்த்திருப்பணிச் சபைப் பொருளாளரின்

# ஆசியுரையும் நன்றி நவிலலும்

தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவன்.

அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஆவரங்கால் திருப்பதி அம்மையப்பனுக்கு அடியார்கள் பக்திவெள்ளம் பெருக்கெடுத்தோட கால்கோள் செய்த திருப்பணி இன்று நிறைவாக நிறைவேறிய பொன்னாள்.

திரைகடலோடியும் திரவியம் தேடிய திறன்மிகு ஆவரங்கால் பதியில் உதித்த பெருமைசேர் வள்ளல்கள் எங்கிருந்தாலும் இத்திருப்பணியை மதிப்புச் செய்து வாரிவழங்கினார்கள்.

அந்த வள்ளன்மையில் செழுமையோடு அடையா நெடுங்கதவினராய் இந்த மண்ணில் வாழும் சிவநெறிப் புரவலர்களது கொடைத்திறனும் சித்தரத்தேரை வீதி உலா வரச் செழுமை செய்தது.

அந்தவகையில் அனைத்து சிவசேவைப் பெரியோர்க்கும் பொருளாளராகிய யான் அருளோடு அகம்நெகிழ நன்றி நவில்கிறேன்.

அரனார் அம்மையப்பராய் வீதி உலாவரச் சித்திரத்தேரேறும் சீரிய திருநாள் இன்றாகும். அந்தப் பெறுதற்கரிய காட்சியைக் கண்டு தெய்வமாட்சியில் மூழ்க பக்தகோடிகளே வருக; பெறுக அவனருள் எனப்பேசா நிற்கின்றோம்.

ஸ்ரீ பர்வதவர்த்தனி சமேத
நடராஜராமலிங்கேஸ்வரர் தேவஸ்தானம்
ஆவரங்கால் - புத்தூர்.

— க. மனோகர நேரு
— பொ. இராஜகோபால்
பொருளர்
தேர்த்திருப்பணிச்சபை.

உ

சிவமயம்

ஆவரங்கால் ஸ்ரீ பர்வதவர்த்தனியம்மை சமேத ஸ்ரீ நடராஜராமலிங்கேஸ்வரர் சுவாமி திருக்கோயிலுக்கான புதிய சித்திரத்தேரை உருவமைத்த திருநெல்வேலி சிற்பர் இரத்தினம் தரு ஆ. சீவரத்தினம் அவர்களது புத்திரன் திருவாளர் சீ. ஜெயப்பிரகாஷ் அவர்களின் சிற்பக்கைவண்ணத்தை மதித்து

# "சிற்பப் பிரகாஷம்"

என்ற விருதினை வழங்கி

# வாழ்த்துகிறோம்

மருந்தும்மந் திரமும் காந்தி மதியம்மை வலமும் வாய்ந்தார்
இருந்தருள் நெல்லை போலிவ் வீழத்தே அறிஞர் வாழப்
பொருந்திய திருநெல் வேலிப் பொற்பதி விசுவ கர்மத்
திருந்திய குலத்தோர் செய்த தவப்பயன் சீவரத்தினம்.

அந்தணன் படைப்பாம் செய்கை அருஞ்சிற்பச் செயலால் ஆற்றல்
தந்தனமாகத் தாங்கும் சால்பினால் சிற்பர் ரத்னம்
நற்றமிழ் ஈழக் கோயிற் கெனப்பல நற்றோர் செய்தான்
அந்தமில் சிறப்பி னான்ற ஆச்சார்ய சீவ ரத்னம்.

அன்னவன் மைந்தன் ஆண்டில் இளைஞனாம் ஜெயப்பிர காஷ்
தென்னவன் சிவனாம் ராம லிங்கனூர் செம்பொற் றேரை
முன்னவன் அருளால் தந்தை முன்வழி நடத்த முற்றும்
மன்னவன் பணியின் மாண்பாய் மலரவே மகிழச் செய்தான்.

சிற்பரத் தினமாம் சீவ ரத்தினம் சேயாம் செம்மல்
சிற்பரன் சிவனூர் தேரைக் கைவண்ணம் சிறக்கச் செய்தான்
தற்பரன் அருள்சார் வாக ஜெயப்பிர காஷ் தானே
வெற்பமர் விளக்காய்ச் ''சிற்பப் பிரகாஷ்'' ஆகவெல்க.

ஆவரங் காவில் அம்மை பாங்கமர் சிவனார் தேரைத்
தேவரங் கினிலே சிட்டி செய்திசை முகன்போற் செய்தான்
ஏவரும் புகழ ஈடில் ஜெயப்பிர காஷ் ஏந்தல்
சேவரு வோர்கள் காக்கச் சீர்திரு சிறக்க வாழ்க.

சிவன் கோவில்,
ஆவரங்கால்.
யுவ ஷூ ஆனி மீ, 14உ
28-06-1995.

—தேர்த்திருப்பணிச் சபை
—தர்மகர்த்தா சபை.

உ

பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணன்
தலைவர், இந்து நாகரிகத் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# தேரின் மகிமை

எங்குமாய இறைவன் ஆன்மாக்கள் மீது கொண்ட அளப்பரிய கருணையால் உருவத்திருமேனி கொண்டு எழுந்தருளி அருள் சுரக்கும் இடமே ஆலயம். இவ்வாலய வழிபாட்டுக்கு எமக்கு வழியமைத்துக் கொடுக்கும் நூல்களே சிவாகமங்களாகும். சிவாகமங்கள் வகுத்துக் கூறும் கிரியை மரபில் பிரதிஷ்டையையடுத்து மிக உன்னத இடத்தைப் பெறுவது மகோற்சவமாகும். ஆலயங்களில் வருடந்தோறும் நிகழும் பெருவிழா என இதனைக் குறிப்பிடலாம். இவ் விழா வழிபடுவோர் உள்ளங்களிலே பக்தியுணர்வை மேன்மையுறச் செய்யும் சிறப்பு வாய்ந்தது. இவ் விழா நாட்களில் கொடியேற்றம், தேர்த் திருவிழா, தீர்த்தம் ஆகிய மூன்றும் உன்னதமானவை.

உற்சவம் இறைவனது ஐந்தொழில்களின் தத்துவத்தை உள்ளடக்கியுள்ளது. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களின் உண்மைகளைப் புலப்படுத்தி நிற்பது இவ் வருடாந்த உற்சவமாகும். இவ் விழாக்களில் மக்களது உள்ளத்தைக் கவருவது இரதோற்சவம் எனச் சிறப்புப் பெறும் தேர்த் திருவிழாவாகும். ஒரு கிராமத்திலே உள்ள ஆலயத்தில் தேர்த்திருவிழா என்றவுடன் அக்கிராமமே விழாக் கோலங் கொண்டு விடுவதோடு மக்களது உள்ளங்களிலும் புதுப் பொலிவு பெற்று விடுகின்றன. சிறியோர் முதல் பெரியோர் வரை எவவித வேறுபாடுகளுமின்றி எம்பெருமான் தேரேறி அருள்பாலிக்கும் தெய்வீகக் காட்சியில் லயித்து விடுவர்.

ஓர் ஆலயத்தில் வருடாந்த மகோற்சவம் நடைபெறுவதற்கு முன்னர் அவ்வாலயமும் அவ்வாலயச் சூழலும் புனிதம் அடைகின்றன. எம்பெருமானது தெய்வீகப் பொலிவை மேன்மையுறச் செய்யும் கிரியைகளினாலும் அவற்றுக்கு ஆதார சுருதியாக விளங்கும் மந்திரங்களினாலும் அவ்வூரே புனிதத்துவம் அடைந்து விடுகின்றது. இச் சிறப்புக் கருதியே அன்று தொட்டு இன்று வரை மக்கள் மிக்க ஆவலுடனும் பக்திச் சிரத்தையுடனும் மகோற்சவத்தை ஆலயங்களில் பேணி வருகின்றனர்.

மகோற்சவத்தில் சிறப்பிடம் பெறும் தேர்த் திருவிழா இறைவனுக்குரிய சிறந்ததொரு இராஜோபசாரமாகும். மக்களது பக்தியின் சின்னமாக இறைவனுக்கென அர்ப்பணிக்கப்பட்ட தேரில் கலைமரபும் சமயமரபும் சங்கமமாகின்றன. அனைத்து மக்களது திருப்பணிக் கைங்கரியத்தினால் உருவாகிய தேர் எண்ணற்ற கலைஞர்

களது கைவண்ணத்திற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டு. நீண்ட காலமாகப் பேணப்பட்டு வரும் சிற்ப விதிமுறைகளுக் கேற்ப அமைக்கப்படுவதே இத் தேராகும். நிற்கும் போதும், இறைவனது திருமேனி யைத் தாங்கி ஆலய வீதியில் அசைந்தாடிச் செல்லும் போதும் அதன் நிகரற்ற கம்பீர மான தோற்றம் மக்கள் மனதை விட்டக லாதது. 'ஊர் கூடித் தேர் இழுத்தல்' என்ற முதுமொழிக்கேற்ப அனைத்து மக் களும் எத்தகைய வேறுபாடுமின்றி வடந் தொட்டுத் தேர் இழுப்பது ஓர் உன்னத மான காட்சியாகும். தேர் இருப்பிலிருந்து புறப்பட்டு மீண்டும் எத்தகைய இடையூறு மின்றி இருப்பிற்கு வந்துவிட்டால் அடி யார்கள் 'அரோகரா' கோஷமிட்டு தமது மனமகிழ்ச்சியையும் பக்தியுணர்வையும் வெளிப்படுத்துவர். அந்தளவுக்கு இவ் விழா புனிதத்துவம் உடைய தொன்றாக விளங்கி வருகின்றது.

தேரின் மகிமைபற்றி இலக்கிய கலா நிதி பண்டிதமணி கூறும் கருத்து சிந்தனைக் குரியது;

இந்த உடம்பு ஒப்பற்றதொரு தேர். உயிரானது உடம்பை இயக்கிக் கொண்டி ருக்கின்றது. உடல் வெறுஞ் சடம். உட லாகிய தேர் தன்னை இயக்கிக் கொண்டி ருப்பது உயிர் என்பதை அறியவில்லை.

உயிரும் ஒரு தேரே. உயிரை உயிருக் குயிர் இயக்கிக் கொண்டு உயிராகிய தேரில் வீற்றிருக்கின்றது. உயிர்க்குயிர் தான் கடவுள். இந்தப் பூமியும் இறைவ னுக்கு ஒருதேரே. பூமியாகிய தேரில் இறைவன் எழுந்தருள் புரியும் உண்மையை உணர்பவர்களுக்கு, இவ்வுலகில் யாதுமோர் குறைவில்லை. உயிரும் பூமியும் இறைவ னுடைய சிறிய தேர்கள்.

எனக் குறிப்பிடுகின்றார்.

தேரின் அமைப்பும் உறுப்புக்களும் பற்றி பல்வேறு விளக்கங்கள் தரப்படுகின் றன. மந்தகேசரி மலைகள் அச்சு, சூரிய சந்திரர் சக்கரம். ஆறுபருவங்கள் சந்தி; பதினான்கு உலகங்கள் பதினான்கு தட்டு கள்; ஆகாயம் ஆசனம்; உதயகிரி அஸ்த கிரிகள் கூவிரம்; நதிகள் கொடிகள்; நட் சத்திரங்கள் விதானம்; மோட்ச உலகம் மேல் விரிவு; யாகங்கள், சட்டம்; நாள் முதலியன குறுக்கு மரங்கள்; அஷ்ட மலைகள் தூண்கள்; அஷ்டதிக்கு யானை கள் தாங்கும் ஆதாரங்கள்; ஏழுகடல்கள் தேர்ச்சீலைகள்; வேதாங்க உபாங்கங்கள் மணிகள்; வாயுக்கள் படிகள்; நான்கு வேதங்கள் குதிரைகள்; கங்கை முதலிய தேவமாதர்கள் சாமர மிரட்டுவோர்; மேரு மலையில்; சரஸ்வதி வில்லிற்கட்டிய மணி; வாசுகி நாண்; விஷ்ணு பாணம்; அக்கினி தேவன் பாணத்தின் முனை; வாயு தேவன் அம்பிறகு; பிரமன் சாரதி; திரிபுரங்கள் மும்மலங்கள்; தாரகாட்சன் கமலாட்சன் வித்தியுன்மாலி எனும் மூவசுரர்களும் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் எனும் மூவகையான்மாக்கள்; தேவபதம் மோட்சபதம் ஆகியன திருவடி என மரபு வழியாக விளக்கம் கூறப்படுகின்றது. புராணங்கள் சிவபெருமான் முப்புரங்களை எரித்த தெய்வீக வரலாற்றைக் கூறுகின் றன. சங்கத் தொகை நூல்களில் ஒன்றா கிய பரிபாடலிலும் இப்புராணச் செய்தி இடம் பெறுகின்றது.

ஆதியந்தண னறிந்து பரிகொளுவ
வேத மாபூண் வையத் தேரூர்ந்து
நாக நாணா மலை வில் லாக
மூவகை யாரெயி லோரழ லம்பின்
முனிய

என்பதே அச்செய்தி. திருமூலரது திரு மந்திரம் இத்தெய்வீகச் செயலுக்கு சிறந் ததொரு தத்துவ விளக்கமொன்றினைத் தருகின்றது.

அப்பணி செஞ்சடை யாதி புராதனன்
முப்புரஞ் செற்றன னென்பர்கள் மூடர்கள்
முப்புரமாவது மும்மல காரியம்
அப்புர மெய்தமை யாரறிவாரே.

இரதோற்சவத்தின் மகிமையைப் பற்றியறிவதற்குத் துணைசெய்யும் முப்புரங்களை எரித்த வரலாற்றை ஞானசம்பந்தரது வாக்கினாலும் நாம் உணரலாம்.

விருது குன்றம்மா மேருவி னாணரவாவன லெரியம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின்றுறைபதி யெந்நாளுங்
கருது கின்ற வூர் கனைகடற் கடி கமழ் பொழிலணி மாதோட்டங்
கருதி நின்றகே தீச்சரங் கைத் தொழக் கடுவினை யடையாவே.

வேதங்களில் ஒன்றெனச் சிறப்புப் பெறும் யசுர்வேதத்தில் நடுமத்தியாகிய நாலாவதுகாண்டத்தில் காணப்படும் ஸ்ரீருத்திரத்தில் தேர் பற்றிய குறிப்புகள் இடம் பெறுகின்றன. ரதிப்யகா – தேரில் செல்பராயும் ரதபதிப்யஸ்ச - தேர்களின் தலைவராகவும் விதந்து கூறப்படுகின்றது. ஆலய அமைப்பினையொத்த சில அம்சங்கள் தேரிலும் காணப்படுகின்றன. ஆலய அமைப்புப்பற்றிய நூல்கள் கோயில்களை மூன்று முக்கிய பாணிகளாகப் பிரிக்கின்றன. அவை. நாகரம், திராவிடம், வேஸரம் ஆகும். தேரின் அமைப்பு முறைகளிலும் இவை வழக்கிலிருந்துவருகின்றன. அதாவது சதுர வடிவமான தேரை நாகரம் என்றும் எண்கோண வடிவானதேரை திராவிடம் என்றும் வட்டவடிவமான தேரை வேஸரம் என்றும் சிற்பநூல்கள் குறிப்பிடுகின்றன. இத்தகைய அமைப்பினை கொண்ட தேர்கள் பல்வேறு விதமாக உருவாக்கப்படுகின்றன. உத்தர மட்டவேலை, இரட்டைப் பஞ்சாங்கவேலை, முகபத்திர வேலை, என ஒன்பது விதமாக அமைக்கலாம்.

மரத்தினால் செய்த அழகுமிக்க தேர்கள் தமிழகத்துக் கோயில்களில் உள்ளன. பெரிய அளவில் அமைந்த கம்பீரமான சக்கரங்கள்; உள்ளத்தைக் கவரும் சிறந்த சிற்ப வேலைப்பாடுகள் போன்றவை குறிப்பிடத்தக்கன. தமிழகத்து ஆலயத் தேர்களில் மிகப் பிரம்மாண்டமானது புகழ் பெற்ற திருவாரூர்த் தேராகும். அற்புதமான சிற்ப வேலைப்பாடுகள் காண்போரை வியக்க வைக்கும் கம்பீரமான தோற்றம் ஆகியவற்றுக்குப் பேர் போனதாகும். இதனைப் போன்று ஸ்ரீவில்லிபுத்தூர், காஞ்சி ஏகாம்பரேசுவரர், மதுரை, ஸ்ரீரங்கம், குடந்தை சாரங்கபாணி ஆகிய ஆலயங்களுக்குரிய தேர்களும் கவர்ச்சிமிக்கவை.

தேர்ச்சில்லிலிருந்து இறைவனை வீற்றிருக்கச் செய்யும் பீடம் வரை மரத்தினால் சிற்ப நுட்பம் பொலியும் வண்ணம் செய்வது மரபு. அதன் மேற்பகுதி சிகரம்வரை கம்பு, தடி முதலியவற்றாலும் பலகலை நுட்பம் வாய்ந்த பொருட்களாலும் கட்டிக் கோயில் அமைப்பினைக் கொண்ட விமானம், தூபி முதலியன விளங்கச் செய்வது மரபு. தமிழகத்தில் பிரபலமான ஆலயங்களில் தேர் இவ்வாறே பீடம் வரை சித்திர வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டு மேல் வேலைகள் பல வண்ணத் துணிகளினாலும் பல அழகு வாய்ந்த பொருட்களாலும் அமைக்கப்படுவன. நிரந்தரமாகச் சிற்ப நுட்பங்களுடன் சித்திரத்தேராக உருவாக்கும் மரபும் உண்டு. ஈழத்தில் சிறந்த அநுபவம் மிக்க சிற்பக் கலைஞர்களின் கைவண்ணத்தில் பல்வேறு ஆலயங்களில் இத்தைய அழகுமிக்க சித்திரத் தேர்கள் உருவாகியுள்ளன. சதுரதேர், வட்டத்தேர், அறுகோணத்தேர், எண் கோணத்தேர் என்ற பல்வேறு வடிவங்களில் தேர்கள் அமைக்கப்படுகின்றன. கோயிலில் உருவாக்கப்படும் புதுத்தேர் உரிய அமைப்பினைப் பெற்று விட்டதா எனப் பரீட்சித்து பார்க்

கும் வகையில் முதன் முதலாக நடத்தப் படுவது வெள்ளோட்டம் எனப்படும். இந் நாளில் தேர் உருவாக்கத்தில் ஒன்றி ணைந்து செயற்பட்ட கலைஞர்களுக்கு உரிய சன்மானம் வழங்கி கௌரவிக்கும் மரபு உள்ளது. இந்நாளில் தேர் முதன் முதலாக ஆலயத்தின் திருவீதியில் வலம் வரும்.

தேரின் நான்கு சக்கரங்களையும் மேல் தட்டினையும் மேலே அமைந்துள்ள விதான அடுக்குகளையும் அவற்றின் உச்சியிலுள்ள கலசத்தையும் அதற்கு மேல் பறக்கும் கொடியினையும் பார்த்தால் உயிர் இறை வனை அடையச் செய்யும் வழியாக அமைந் துள்ளது. தேரும் தேர் ஓட்டமும் இறைவ னோடு உயிர் இரண்டறக் கலக்கும் பேரின்ப வாழ்வுக்கு வழிகாட்டி நிற்கின்றன. தேர் ஒன்று கலையெழிலுடன் உருவாகி இறை வனைத் தாங்கித் திருவீதியில் ஓடும் நிலைக்கு வரும் வரை பல்வேறு நிலை சார்ந்தவர்களின் கடின உழைப்பு அதற் குத் தேவை. பல காலமாகப் பொறுமை யுடன் மேற்கொள்ளப்படும் முயற்சியின் சிறந்த பெறுபேறே இத் தேராகும். எனவே தான் ஆலயங்களில் அடியார்கள் பலரைக் கொண்ட தேர்த்திருப்பணிச் சபையொன் றினை உருவாக்கி இக் கைங்கரியம் நிறை வேற்றப்படுகின்றது. இறைவனுக்கென நாம் அர்ப்பணிக்கும் ஓர் உயர்ந்த திருப் பணி இதுவாகும். வாழ்க்கையில் எந்த நெறியில் நின்று வாழ்ந்தாலும் பிறவாப் பெருநெறியிலே எமது வாழ்வு முடிய வேண்டும் என்ற தத்துவத்தை உணர்த்து வது இத் தேராகும். ஆணவம் அடங்கி நாம் ஆன்ம ஈடேற்றம் பெற இப் புண் ணிய விழா எமக்கு வழியமைத்துத் தரு கின்றது. □

துதிக்க மதிதந்த தூயோன்றன் பாதம்
துதிக்க வினைகள் துகளாம் — மதிக்கருளும்
ஐயன் திருமதலை ஆறுமுகன் வீதியிலே
தெய்வமென நின்றான் தெளி.


—சிவயோகசுவாமிகள்

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
தலைவர், தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# திருமுறைகளிலே தமிழ்

எம்முடைய வரலாற்றின் சிற்சில கால கட்டங்களிலே தமிழ் மொழியினை இலக்கிய ஆக்கங்களிலே உயர்வாகப் பேசும் பாங்கினைக் காண்கிறோம். ''ஒலிகொள் இன்னிசைச் செந்தமிழ்'' என்று பல்லவ மன்னர்களுடைய காலத்திலும், ''முத்தமிழால் வைதாரையும் இங்கு வாழவைப் போன்'' என்று இஸ்லாமிய, மேலைத் தேய ஆட்சிப் பரவல் தமிழ்நாட்டிலே ஏற்பட்ட போதிலும், ''தமிழுக்கு அமுதென்று பேர்'' என்று இந்த நூற்றாண்டிலும் பாடியுள்ளமையை நாம் அறிவோம். இவ்வாறு தமிழ் மொழியைச் சிறப்பித்துப் பாடியமைக்கு அவ்வக்காலச் சூழ்நிலையே காரணமாகின்றது.


திருமுறைகளெனத் தொகுக்கப்பட்ட சைவப் பக்திப் பாசுரங்கள் கி. பி. ஆறாம் நூற்றாண்டு தொடக்கம் பாடப்பட்டன. இப்பக்திப் பாசுர இலக்கிய மரபைத் தொடக்கிவைத்தவர் காரைக்காலம்மையார் ஆவர். அம்மையார் பாடிய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் தமிழிலக்கிய வரலாற்றிலே புதிய இலக்கிய வடிவங்களாகக் கொள்ளப்படுகின்றன. காதலையும், மன்னர்களையும் அறநீதிக் கருத்துக்களையும் பத்துப் பாடல்களிலே பாடும் மரபு முன்னர் இருந்தது. இவை ஆசிரியப்பாவில் அல்லது வெண்பா யாப்பிலேதான் அமைந்தன. ஆனால் அம்மையார் பாடிய பதிகமோ சிவனைப் பற்றி விருத்த யாப்பிலே அமைந்த பத்துப் பாடல்களைக் கொண்டமைந்தது. இத்தகைய பொருளும் வடிவமும் கொண்ட இலக்கியம் முன்னர் எப்போதும் எழுந்ததில்லை. அத்துடன் அம்மையாருடைய பதிகத்தில் பதினோராவது பாடலும் உண்டு. அப்பாடல் முதல் பத்துப் பாடல்களையும் படிப்பதனால் ஏற்படும் பயன் என்னவென்று கூறுவது. இப்பதினோராவது பாடலிலேதான் அம்மையார் ''செப்பிய செந்தமிழ் பத்தும்'' என்று குறிப்பிடுகிறார். தான் பாடிய பத்துப் பாடல்களும், சிவன் திருவாலங்காட்டு ஈமக்காட்டிலே ஆடும் நடனத்தைப்பாடும் அப்பத்துப்பாடல்களும், ''பத்துச் செந்தமிழ்'' என்று குறிப்பிடுகின்றார். இவ்வாறு தமிழ் மொழியையும் தான் நம்பி வணங்கும் சிவனையும் பாடல்களிலே பாடும் மரபினை அம்மையார் தொடக்கிவைக்க அது மடை திறந்த வெள்ளம் போல அடுத்துவந்த நூற்றாண்டுகளிலே பரவி ஓடியது. அமையார் தமிழைப் பாடியது போலத் திருஞானசம்பந்தரும் தன்னுடைய பெரும்பாலான பதிகங்களின் இறுதிப் பாடல்களிலே தமிழையும் பாடினார். ''திருநெறிய தமிழ்'' என்று செல்வமும் அழகும் மிகுந்த தமிழ் எனவும், ''துளங்கில் தமிழ்'' என்று நீண்ட கால, இடையீடற்ற இலக்கிய - பண்பாட்டுப் பாரம்பரியம் உடைய தமிழ் எனவும், ''இறை தமிழ்'' என்று இறைவனால் விரும்பப்பட்ட, இறைவனுக்குப் பாடப்படும் தமிழ் எனவும், ''நலங்கொள் தமிழ்'', ''சொல்லார் தமிழ்'', ''பாமரு செந்தமிழ்'', ''ஞாலமிக்க தண்டமிழ்'', ''சீர்மிகுத்த தமிழ்'' எனவும் சம்பந்தப் பெருமான் பாடியுள்ளார்.




சித்திரத் தேர்த் திருப்பணியின் கால்கோள் விழா



சித்திரத்தேரின தெய்வ மனிதத் திருவுருவங்களைச் சிருட்டிக்கும் சிருட்டிகர்த்தா
திரு. ஆறுமுகம் சிவலிங்கம் ஆச்சாரியர்
ஆறுமுகம் சிற்பாலயம்



தேர்த் திருப்பணியில் ஈடுபடும் சிற்பாச்சாரியர்கள்



சிற்பவல்லுநர் சிலரின் கைவண்ணங்கள்



சித்திரத் தேரின் பவளக்கால் நாட்டுதல்



சிற்ப வல்லுநர் சிலரின் கைவண்ணங்கள்

*தெய்வீகத் தேர்த்திருப்பணியில் சக்கரவர்த்தியான சிற்பாசாரியாரின் திருமரபு*



திரு விநாயகர் ஆறுமுகம் ஆச்சாரியார் (பாட்டன்)

நல்லை வீரமாகாளி, புத்தூர் சிவன், கோவை கந்தசாமி தேர், இணுவில் சிவகாமி கோயில் மகிடா சுரன், நல்லைக் கந்தன் கயிலாய வாகனம் என்பன வற்றின் படைப்பாளர்.



திரு. ஆறுமுகம் – ஜீவரத்தினம் சிற்பசக்கரவர்த்தி (தந்தை)

திருக்கேதீச்சரம், திருநெல்வேலி சிவன், வண்ணார்பண்ணை நாச்சிமார், கோண்டாவில் ஆசிமடம் முதலிய நூற்றிருபத்தைந்து கோயில்களில் சித்திரத்தேர் உருவாக்கியவர்.



திரு ஜீவரத்தினம்–ஜெயப்பிரகாஷ் சிற்பப்பிரகாஷ் (மகன்)

புதுக்குடியிருப்பு கந்தசாமி கோயில். ஆவரங்கால் சிவன் கோயில் தேர்களை ஆக்கிச் சிற்பக் கலையைப் பிரகாசிக்கச் செய்தவர்.

அப்பர் சுவாமிகள் ''தமிழோடிசை பாடல் மறந்தறியேன்'' என்றும், ''பன்னிய செந்தமிழறியேன் கவியேலமாட்டேன்'' என்றும் பாடுகிறார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் ''சந்தம்மிகு தண்டமிழ்'' எனவும், ''ஒலிகொள் இன்னிசைச் செந்தமிழ்'' எனவும் ''செந்தமிழ்த்திறம் வல்லிரோ செங்கணரவம் முன்கையிலாடவே'' எனவும்பாடியுள்ளார். மணிவாசகர் ''தண்ணார் தமிழளிக்குத் தண்பாண்டி நாட்டானை'' எனவும் பாடியுள்ளார். திருமுறைகள் எல்லாவற்றிலுமே தமிழ்பற்றிய குறிப்புக்கள் இடம் பெற்றுள்ளன எனினும் காரைக்காலம்மையார், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய பாசுரங்களிலேயே தமிழ் பற்றிப் பெருந்தொகையான குறிப்புக்கள் இடம் பெறுகின்றன. தமிழுணர்வுடன் இப்பாடல்கள் பாடப்பட்டுள்ளன. இத்தகைய தமிழுணர்வு ஏற்படுதற்குரிய பின்னணி யாது?

பாகத மொழியைச் சமய மொழியாகக் கொண்ட சமணமும், பாளிமொழியைச் சமயமொழியாகக் கொண்ட பௌத்தமும் தமிழ் நாட்டிலே கி. பி. மூன்றாம் நூற்றாண்டளவிற் செல்வாக்குப் பெறத் தொடங்கின. சமண, பௌத்தர் தம்முடைய சமயக் கருத்துக்களை மக்களிடையே பரப்புவதற்குத் தமிழ் மொழியிலே இலக்கியங்கள் படைத்தனர். வச்சிரநந்தி என்னும் சமணர் தமிழ்ச் சங்கம் ஒன்றை மதுரையிலே தொடக்கினார். தமிழ் மொழியை ஒரு கருவியாகக் கொண்டு தம் சமயங்களைத் தமிழ் நாட்டிலே பரப்பினர். இச்சமண பௌத்தர்களுடைய செல்வாக்கைக் குறைத்து அச்சமயங்களைத் தமிழ் நாட்டிலிருந்து அகற்றுதற்கு பக்தியுணர்வுடன் மாத்திரமன்றித் தமிழுணர்வுடனும் பாசுரங்கள் பாடவேண்டிய தேவை சைவ, வைணவப் பக்தியடியார்களுக்கு ஏற்பட்டது. அத்துடன் தமிழ் மொழியைச் சிவனுடனும் திருமாலுடனும் சேர்த்துப் பார்க்கும் ஒரு போக்கும் பக்தியடியார்களிடம் காணப்பட்டது. தமிழிலே இருந்த ஈடுபாடு காரணமாக,

அன்பே தகழியா யார்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா – நன்புருக
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத்தமிழ் பயின்ற நான்.

என்று ஒரு வைணவ ஆழ்வார் பாடுகிறார். ''ஞானத் தமிழ் பயின்றநான்'' என்று அவர் மனத்திடத்துடனும், உறுதியுடனும் கூறியுள்ளார். தமிழ் மக்கள் மொழிப்பற்றுடையவர்கள். இம்மொழிப் பற்றினை எழுச்சியுற வைப்பதன் மூலம் பிற சக்திகளைத் தமிழ் நாட்டிலிருந்து அகற்ற முடியும் என்பதை நாயன்மார்கள் நன்கு உணர்ந்தனர். 'பக்தி' என்னும் அன்புணர்வுடன் தமிழுணர்வினையும் குழைத்து இனிய தமிழ்ப் பாசுரங்களைத் தந்தனர். தமிழ்மொழியினுடைய சிறப்புக்களையெல்லாம் எடுத்துக் கூறினர். சுந்தரர், இறைவன் தன்னுடைய முன்கையிலே பாம்பினை வைத்து அதனை ஆடவைக்குந்திறத்தினைக் குறிக்கும்போது ''இறைவா! உனக்குச் செந்தமிழ் நன்கு தெரியுமா? அதிலே நீர் வல்லமையுடையவரா? அப்படிச் செந்தமிழிலே வல்லவராயிருந்தால்தான் பாம்பைக் கூட நன்றாக ஆடவைக்க முடியும்'' என்னும் கருத்தினை உள்ளடக்கியதாக,

''செந்தமிழ்த் திறம் வல்லிரோ
அரவ முன்கையி லாடவே''

என்று பாடுகிறார். சுந்தரர் செந்தமிழ் வல்லவர்; அவர் செந்தமிழ்பற்றி இவ்வாறு கூறுகிறார்.

திருமூலநாயனாருக்கு, 'தமிழ்'' 'அன்பு', 'பக்தி' என்பனவெல்லாம் ஒரு பொருள் குறிக்கும் சொற்கள். இறைவன்

தமிழை விரும்பியவர் என்பதைப் பெரிய புராண ஆசிரியர்,

''மற்றுநீ வன்மைபேசி வன்றொண்ட
னென்னு நாமம்
பெற்றனை நமக்கு மன்பிற் பெருகிய
சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டே யாகு மாதலான்
மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு கென்றார் தூமறை
பாடும் வாயார்.''

என்றும்,

''சொல்லார் தமிழிசைபாடிய
தொண்டன் றனையின்னும்
பல்லா றுலகினில்நம் புகழ்பாடு...''

என்றும் கூறியுள்ளதைக் காணலாம். திருமூலர் சேக்கிழாருக்கு முன்னே வாழ்ந்தவர். அவர் சேக்கிழாரைவிட ஒரு படி மேலே சென்று,

''என்னை நன்றாக இறைவன்
படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு
மாறே''

என்று கூறியுள்ளார். இங்கு ''தமிழ் செய்யுமாறு'' என்னுந் தொடர் இறைவனைத் தமிழ்ப் பாசுரங்களிலே பாடுதல் என்னும் பொருளையுந் தரலாம். ஆனால், இங்கு இறைவனிலே பக்தி செய்தல்; அதன் வழியாக அப்பக்தியுணர்வைப் புலப்படுத்துதல்; அவ்வாறு புலப்படுத்துமிடத்து தமிழ்ப்பாசுரங்களும் ஒருவகையான ஊடகமாக அமைந்துவிடும்.

திருமுறைகளிலே தமிழ் பற்றிக் குறிப்பிட்டதை இதுவரை பார்த்தோம். இனி திருமுறைத் தமிழ் எப்படிப்பட்டது என்பதை நோக்கலாம். சங்கப் பாடல்கள், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இலக்கியங்களிலே சொற்கள் செறிவுற்ற இறுக்கமான தமிழ் நடை பயின்று வந்தது. திருமுறைத் தமிழ் நெகிழ்ச்சியுற்ற தமிழாக அமைந்தது. நான்கு சீரடிகளாக இருந்து வந்த பாடல் மரபு அறுசீரடிப் பாடல் மரபாக மாற்றமடைந்தது. எளிமையான சொற்கள் பயின்று வந்தன. நாயன்மார்களுடைய தேவாரங்கள் பல படியாதவர்களுடையவாயிலும் தவழ்வதன்காரணம் இதுவேயாகும். திருமுறைத் தமிழ் எமக்குப் புதிய பல சொற்றொடர்களைத் தந்தது. பல்வேறு உணர்வுப் புலப்பாட்டுக்கேற்ற தொடர்களை அமைப்பதன்மூலம் புதிய சந்தங்கள் உண்டாயின. திருமுறை பாடிய நாயன்மார்கள் அறிமுகஞ் செய்து வைத்த சந்தங்கள்தான் கம்பன்கையிலே பொன்னுடல் பெற்றன. பெருந்தொகையான வடசொற்கள் தமிழுருவாக்கம் பெற்றுத் தமிழ்மொழியிலே புகுவதற்கும் திருமுறைத் தமிழ் காரணமாயிற்று. □

எட்டு மிரண்டு பறியா வெனக்கு நல்ல
பட்ட மளிக்கப் பரிந்துவந்த மெய்ப்பொருளை
வட்டஞ்சூழ்ந் தடிபரவும் மங்கைமார் கொண்டாடுஞ்
சிட்டர்வாழ் நல்லைநகர்த் தேரடியில் கண்டேனே.

—சிவயோகசுவாமிகள்

கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை
விரிவுரையாளர்,
ஆசிரிய கலாசாலை, கோப்பாய்.

# சிவஞானம் நல்கும் திருமந்திரம்

மக்கள் உய்தி அடையும் பொருட்டு மந்திரங்களையுடைய நூல் 'மந்திரநூல்' என்று சொல்லப்படும். குறிப்பிட்ட ஒரே யொரு பயன் கருதுவார் ஒரேயொரு மந்திரம் ஓதுவர். பயன்கள் பற்பலவாயினும் ஒரேயொரு பயன் மட்டும் மக்களுக்கு நிலையான இன்பத்தைப் பயக்கவல்லது. அதுவே வீட்டின்பமாகிய பயன். வீடுபேற்றினை 'திரு' என்றும் சொல்வர். இத் 'திரு' என்னும் சொல்லை அடைமொழியாகக் கொண்ட மந்திரம் 'திருமந்திரம்' ஆகும். இத்திருமந்திரம் என்னும் சைவத்திருமறை ஆன்ம ஈடேற்றம் பயக்கவல்ல அற்புத நூலாகும்.

திருமந்திர நூலை சைவாகமங்கள் 'பஞ்சாக்கிர மந்திரம்' எனக் கூறும். வேதாந்த நூல்கள் 'பிரணவமந்திரம்' என விளம்பும். எனவே ஓரெழுத்தாகவும், மூன்றெழுத்தாகவும், ஐந்தெழுத்தாகவும் விரிந்து வீடுபேற்றினை விளக்கவல்ல நூலாக இது விளங்குகின்றது.

இவ்விடத்தில் ஆன்மாவுக்கும் உடலுக்குமுள்ள உறவு பற்றி நோக்குவது காலப் பொருந்தும்.

''இவ்வுடலைத் தேராகக் கொள்;
அத்தேரில் ஜீவன் அமர்ந்திருப்ப
தாகக் கொள்;
மனம் கடிவாளமாகவும், புத்தி
சாரதியாகவும் அமையட்டும்''

இவ்வாறு 'கடோ உபநிடதம்' கூறுகிறது.

'ஆன்மா' என்கின்ற பயணி தேரில் அமர்ந்து வாழ்க்கை என்கின்ற பயணத்தை மேற்கொள்வதாக, இஞ்ஞான நூல் கூறுகிறது. இவ்வாழ்க்கைப் பயணம் இனிதுடன் நடைபெற்று, சிவபதம் என்னும் இருப்பிடம் சேர உதவுவன ஞான நூல்கள்.

சாரதிக்கு அடங்காத துட்டக் குதிரைகளைப் போல, ஐந்து புலன்களையும் வளர்த்து விடுபவன் விவேகமில்லாதவன் இவர்களை நெறிப்படுத்துவதற்கு 'திருமூலர்' போன்ற ஞானாசிரியர்கள் அவ்வப்பொழுது தோன்றியுள்ளனர்.

சுவாலித்து எரியும் நெருப்பின் வடிவத்தில் உருவாக்கப்பட்ட தேரானது அழித்தலைக் குறிக்கிறது. தேரின் உறுப்புகள் பிரபஞ்ச உற்பத்தியையும், அதன் பீடம் இதயக்கமலத்தையும் சுட்டுவதாகக் கொள்வர். இந்த இதயக்கமலத்தில் இறைவன் அமர்ந்ததும் தேர் ஓடுகிறது. உயிருக்குயிரான பரம்பொருள் எமது இதயக்கமலத்தில் எழுந்தருளியிருந்தால்தான் வாழ்க்கை என்கின்ற தேரும் ஒழுங்காக ஓடும். இவ்வுண்மையை மிகவும் அழகாகக் கூறுகின்ற தத்துவ நூல்களில் ஒன்றாக 'திருமந்திரம்' உள்ளது.

பசுவிலக்கணம் கூறவந்த திருமூலநாயனார்,

''உன்னும் அளவில் உணரும்
ஒருவனைப்
பன்னுமறைகள் பயிலும் பரமனை
என்னுள் இருக்கும் இளையா
விளக்கினை
அன்ன மயமென்றறிந்து
கொண்டேனே''

'தியானித்த அளவில் உணரும் பரம் பொருளை, வேதங்கள் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கும் அப்பரம் பொருளை, என்னுள்ளத்தில் உறையும் தூண்டா விளக்கினை, அன்னமயம் (ஹம் சம்) ஆனவன் என்று உணர்ந்து கொண்டேன்' என்பது இதன் பொருளாகும்.

''இரண்டு பறவைகள் இனிய தோழர்கள். இவை இரண்டும் ஒரு மரத்தில் உறைந்தன. ஒன்று மரத்தின் கனிகளை விரும்பி உண்ணும். மற்றது கனிகளை உண்ணாது மோனப்பார்வையில் மூழ்கும்',

''இவ்விரண்டு பறவைகளுள் முதலாவது பறவையே ஜீவாத்மா. இரண்டாவது பறவை பரமாத்மாவாகும். இவ்வாறு ''சுவேதாஸ்வதர உபநிடதம்'' கூறுகிறது. இக்கருத்தையே இன்னொரு வகையில் திருமூலர் பின்வருமாறு விளக்குகின்றார்.

''அன்ன மிரண்டுள ஆற்றங்கரையினில்
துன்னி யிரண்டும் துணைபிரியாதன
தன்னிலை அன்னம் தனியென்ற
தென்றக்கால்
பின்ன மடவன்னம் பேறணுகாதே''

நிலையில்லாத இவ்வுலக வாழ்வில் இரண்டு அன்னங்கள் உள்ளன. இவை இணை பிரியாதன. இவற்றுள் ஜீவனாகிய அன்னம் சிவமாகிய அன்னத்தை தன்னில் வேறானது என்று கருதினால், வீட்டின் பத்தை அடையமுடியாது. இதனால் சிவத்தை வேறாகக் கருதுவார்க்கு வீடு பேறு கிடையாதென்பதைத் திருமந்திரம் விளக்குகிறது.

சைவசமயிகளுக்கு 'சாத்திர நூல்கள்' தோத்திர நூல்கள்' என இருவகை நூல்கள் சிறப்புடையன. இவற்றுள் பன்னிரு திருமுறைகளும் தோத்திர நூல்களாகும். பதினான்கு மெய்கண்ட சாத்திரநூல்களும் சாத்திரநூல்களாகும். திருமந்திரம் தோத்திர நூல்களுள் ஒன்றாக, பத்தாவது திருமுறையாக வைத்தெண்ணப்படுகிறது. ஆனால் இதனைத் தோத்திர நூலாக மட்டுமன்றிச் சாத்திர நூலாகவும் அறிஞர் கருதுவர். ''தோத்திரத்தில் சிறந்தது திருவாசகம்; சாத்திரத்தில் சிறந்தது திருமந்திரம்'' எனும் பழமொழியும் இதனை உறுதிப்படுத்தக் காணலாம் 'தோத்திர நூல் 'சாத்திர நூல்' என்பதனை ஏற்றுக் கொண்டு இதனை ஒரு 'யோகநூல்' என்று சிறப்பிப்பாருமுளர்.

திருமந்திரம் ஒன்பது தந்திரங்களையுடையது. இவைதவிர நூலின் தொடக்கத்தில் 112 பாடல்களைக் கொண்ட பாயிரமுள்ளது. இப்பொழுது, சைவசமயிகளாற் போற்றப்படும் சிவாகமங்கள் இருபத்தெட்டாகும். இவ்விருபத்தெட்டு ஆகமங்களுள் ஒன்பது ஆகமங்களைத் தேர்ந்தெடுத்து, ஒன்பது தந்திரங்களாத் திருமூலர் தந்துள்ளார். மேற்படி ஒன்பது ஆகமங்களையும் கற்க, சிவாகமங்கள் முழுவதையும் கற்றவர்களாவர் என்பர். எனவே ஒன்பதுதந்திரங்களையும் கற்பார் சிவாகமங்கள் முற்றிலுமுணர்ந்தவர்களாவர்.

திருமந்திரத்தில் அடங்கியுள்ள கருத்துக்கள் யாவும் மக்கள் உள்ளத்தில் இருக்கின்ற 'நான்' 'எனது' என்றசெருக்கையும் மும்மலத்தையும் அழித்து இறைவனது திருவருளைப் பெறவைக்கும்.

ஜீவாத்மாக்கள் குருமகா சந்நிதானத்தை அடைந்து விட்டால் ஜீவாத்மாக்களைப் பீடித்துள்ள மும்மலங்களும் அழிந்து விடும். சூரிய காந்தத்தின் சந்நிதியில் பஞ்சு தீய்ந்து விடுவது போல மும்மலங்கள் எரிந்து விடுமென உவமை மூலம் திருமூலர் விளக்குவர்.

''சூரிய காந்தமும் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தம் சூழ்பஞ்சைச் சுட்டிடா
சூரியன் சந்நிதியில் சுடுமாறு போல்
ஆரியன் தோற்றமுன் அற்ற மலங்களே'

இத்தகைச் சிறப்பு மிக்க திருமந்திரத்தில் உள்ள ஒவ்வொரு தந்திரமும் கூறும் முக்கிய அம்சங்களை இனி நோக்குவோம்

முதல் தந்திரம் காரணாகமத்தின் சாரமாகும். இத்தந்திரத்தின் முதற்பகுதி மக்களுக்கு வேண்டிய உபதேசத்தைச் செய்கிறது. பின்னர் ஒழுக்க நெறியாக, கொல்லாமை, புலால்மறுத்தல், பிறர்மனை நயவாமை, கள்ளுண்ணாமை என்பவற்றைக் கூறி 'அன்பே சிவம்' என்பதை வலியுறுத்துகிறது.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.

'அன்பே சிவம்' என்று அறிந்தவர் சிவமயமாகிவிடுவார் என்பது இதன் முக்கிய பொருளாகும். எனவே வீடுபேற்றுக்கு அன்பே அடிநாதமாக உள்ளது.

இரண்டாவது தந்திரம் காமிகாகமத்தின் பிழிவாகும். இது சிவபிரானுடைய பரத்துவத்தை நிலைநாட்டுகிறது. இவனே பஞ்சகிருத்தியங்களைச் செய்து ஆன்மாக்கள் வீட்டின்பம் பெற வழிவகுக்கின்றான் எனக் கூறிச் செல்கிறது.

மூன்றாவது தந்திரம் வீராகமத்தின் பிழிவாகும்.

மூன்றாம் தந்திரத்தின் முதற்பகுதி அட்டாங்கயோகம் பற்றி விளக்குகிறது. யோகம் வெறும் சடங்கல்ல. இதனை உண்மையாக உணர்பவர்கள் சிவஞானத்தை உணர்வர். இத்தகைய யோகிகள் அட்டமாசித்திகளைப்பெறுவர். அட்டமாசித்திகளைப் பெறுபவர்கள் அதுதான் எல்லை என ஏமாந்துவிடக் கூடாது. மனதை அமைதிப் படுத்தித் தியானத்தில் அமர்ந்து சமாதிநிலை எய்திச் சிவத்தொடு இரண்டறக்கலத்தல் வேண்டும்.

சிந்தாகமத்தின் சாரமாக நான்காவது தந்திரமுள்ளது, இதில் தியானத்தில் ஈடுபட்டு சமாதிநிலை எய்தமுடியாவிட்டால், அதற்குச் சாதகமாக மந்திரம், யந்திரம் முதலியவைகளைப் பின்பற்ற வேண்டுமென்றும், அவைகளைக் கையாளும் முறைகள் இவைகளென்றும் விளக்கப்பட்டுள்ளன. எதையும் குருவின் மூலம் அறிந்து கொள்வதே சிறந்த மார்க்கம் என்பதும் சொல்லப்பட்டுள்ளது.

ஐந்தாவது தந்திரம் வாதுளாகமத்தின் பிழிவாக உள்ளது. இது சுத்தசைவம், அசுத்த சைவம், மார்க்கசைவம், கடுஞ்சுத்த சைவம் என்னும் சைவத்தின் வகைகள் பற்றி விளக்குகிறது. மேலும், சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நாற்பாதங்கள் பற்றியும், இவற்றினூடாகக் கிடைக்கும் நால்வகை முத்தியின்பம் பற்றும் விளக்குகிறது.

வியாமளாகமத்தின் பிழிவாக ஆறாவது தந்திரமுள்ளது. இதிலே ,சிவகுரு தரிசனம், திருவடிப்பேறு, திருநீற்றுமாண்பு, துறவு, தவம் என்பன விளக்கம் பெறுகின்றன.

ஒவ்வொருவர் உள்ளத்திலும் இறைவன் குடியிருக்கின்றான். அவன் குடியிருக்கும் உடம்பு ஆலயமாகிவிடுகிறது. ''வாய்'' என்ற உறுப்புத்தான் கோபுரவாயில் ஞானாசாரியன் உபதேச வாயிலாக ''நான் யார்'' என்று கேட்டுச் சிந்தித்து, தெளிந்து, நிட்டையிலிருந்து மிகத்தெளிவாக அறிந்துவிட்ட ஞானிகளுக்கு ஜீவாத்மாவே சிவலிங்கமாகிவிடுகிறது. அப்போது பிறப்பு, இறப்புஎன்ற சுழலிலே கொண்டு போய்த்தள்ளும் வஞ்சனை மிக்க ஐம்பொறிகளும் கூட கோயிலின் மணிவிளக்காக மாறிவிடுகின்றன.

''உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோபுர வாயில்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே''

திருவடிப்பேறு பற்றிக் கூறவந்த திருமூலநாயனார்

''திருவடி ஞானம் சிவமாக்குவிக்கும்
திருவடி ஞானம் சிவயோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே''

எனக் கூறுவதும் சிந்தனைக்குரியது.

காலோத்தராகமத்தின் பிழிவாக ஏழாவது தந்திரம் உள்ளது. இதிலே பலவகை இலிங்கங்கள் பற்றியும், ஆறு ஆதாரங்கள், மகேஸ்வரபூசை, சமாதி, குருபூசை என்பனபற்றியும் சொல்லப்பட்டுள்ளன.

சுப்பிராகமத்தின் பிழிவாக எட்டாம் தந்திரம் விளங்குகிறது. இதுவே பதி, பசு, பாசம் பற்றியும் 'தத்துவமஸி' எனும் மகா வாக்கியம் பற்றியும் கூறுகிறது. உடலில் உள்ள பஞ்சபேதம் பற்றிக் கூறும் திருமூலர்

காயப்பை ஒன்று சரக்குப் பலவுள
மாயப்பை ஒன்றுண்டு மற்றுமோர் பையுண்டு
காயப்பைக்குள் நின்ற கள்வன் புறப்பட்டால்
மாயப்பை மண்ணா மயங்கியவாறே''

என விரிப்பர். உபநிடதம் கூறும் பஞ்ச கோசங்களும், அதனுடன் தொடர்புடைய ஆன்மாவும் திருமூலரால் மேற்கூறியபடி விளக்கம் பெறக்காணலாம்.

மகுடாகமத்தின் சாரமாக ஒன்பதாம் தந்திரம் உள்ளது. இதிலே பஞ்சாக்கர விளக்கம், திருக்கூத்துத்தரிசனம், ஞானோதயம், சிவசொரூபதரிசனம், மோனசமாதி, அணைந்தோர் தன்மை என்பன சொல்லப் பட்டுள்ளன.

வேதமாகவும், ஆகமமாகவும் பலவாய் விரிந்துள்ள பொருள் ஒன்றே என்பதைத் திருமூலர் பின்வருமாறு கூறுவர்.

''ஒன்றவன் தானே, இரண்டவன், இன்னருள்
நின்றனன், மூன்றினுள் நான்குணர்ந்தான், ஐந்து
வென்றனன், ஆறு விரித்தனன், ஏழும்பர்ச்
சென்றனன், தானிருந்தான் உணர்ந்தெட்டே''

திருமூலர், முதல் தந்திரமாக ஒழுக்க நெறியைச் சொல்லி, இரண்டாம் தந்திரத்தில் சிவநெறி உண்மைகள் சொல்லி, மூன்றாம் தந்திரத்தில் யோகம் பற்றியும், நாலாம் தந்திரத்தில், யோகத்தில் ஞானம் சித்திக்காதவர்களுக்கு மந்திரம், யந்திரம், முதலியனவும் சொல்லி, ஐந்தாம் தந்திரத்தில் சிவாகமப் பயன்களைச் சொல்லி, ஆறாம் தந்திரத்தில் குருவின் மகிமை கூறி, ஏழாம் தந்திரத்தில் இலிங்க வகைகள், பூசை வகைகள் முதலியனவற்றைச் சொல்லி, எட்டாம் தந்திரத்தில் ஞானச் செய்திகளாக பலவிடயங்களைக் கூறி ஒன்பதாம் தந்திரத்தில் எல்லாம் அவனே என முடிக்கின்றார். ஆகவே எல்லாம் அவனாக விளங்கும் சிவனை அடைய உதவும் ஞான நூலாகவும், யோக நூலாகவும் விளங்குவது திருமந்திரமாகும். எனவே பிறவிப் பெருங் கடலில் நின்றும் நீந்திக் கடைத்தேறி ஆன்ம ஈடேற்றம் பெற வைக்கும் தெப்பமாக விளங்குகிறது ''திருமந்திரம்'' என்பது பெறப்படுகிறது. □

—சோ. பத்மநாதன்

## கலையழகு சொட்டும் ஒரு தேர்

ஆவரங்கால் நடராஜ ராமலிங்க சுவாமிக்கு
சிற்ப வேலைத்
தேர்சமைத்துப் பர்வதபத் தினியுடனே எழுந்தருளச்
செய்தார் இந்த
ஊரவர்;பே ருபகாரம் புரிந்தார்கள்; போற்றுதலுக்(கு)
உரித்தா னார்கள்;
வார்வழங் கியதாலே வள்ளல்களாய் மதிக்கப்பெற்று
என்றும் வாழ்வார்!

தாமரைப்பூ வடிவமைத்து மேல்தளத்தைத் தஞ்சைஆ
வுடையார் கோயில்
போலமைத்து மீனாக்ஷி கல்யாணக் காட்சிகளும்
புனைந்தும், ஏனைத்
தேவரையும் அறுபத்து மூவரையும் உயிர்துடிப்பாய்ச்
செதுக்கி வைத்தோன்
யாவனெனில் ஜெயப்பிரகாஷ்என உலகம் கொண்டாடும்
சிற்பா சாரி!

சிலையுருவில் திருக்கோயில் வரலாறு சொல்லுகிற
தேர்எம் கண்முன்
கலையழகு சொட்ட அசைந்தாடிவரும்; கைகளெலாம்
வடந்தொட் டீர்க்கும்!
தலம், மூர்த்தி, தீர்த்தமெனும் சிறப்பெல்லாம் ஒருங்கமைந்த
தால்இக் கோயில்
நிலையான புகழோடு நிற்கிறது நம்மையெலாம்
நிமிர்த்த வேண்டி!

# "தேர்"ந்த தகவல்கள்

தேர் மிகப் புராதனமானது. தமிழர் வாழ்வோடும், இந்துப் பண்பாட்டோடும் ஐக்கியமானது. வேத இலக்கியங்களிலேயே தேர்பற்றிய செய்திகளைக் காணமுடிகிறது. கடையாணி முதலிய தேரின் நுண்ணிய பாகங்கள் பற்றிய குறிப்புக்கள் இருக்குவேதத்திலேயே காணப்படுகின்றன.

* * *

யசுர் வேதத்திலே ஸ்ரீ ருத்ரமானது இறைவனை இவ்வாறு துதிக்கிறது.

''ரதேப்யோ ரதேப்யஸ்ச் சவோ நமோ நமஃ/
ரதேப்யோ ரதபதிப்யஸ்ச் சவோ நமோ நமஃ//
க்ஷத்ருப்யஃ ஸங்க்ரஹீ த்ருப்யஸ்ச் சவோ நமோ நமஃ//
தக்ஷ்ப்யோ ரதகாரேப்யஸ்ச் சவோ நமோ நமஃ//

(ஸ்ரீ ருத்ரம் 4.1, 4.2)

இதன் பொருள்—

''தேரில் செல்பவர்களாகவும் தேரில்லாதவர்களாகவும் உள்ள உங்களுக்கு நமஸ்காரம். தேர்களாகவும் தேர்களின் தலைவர்களாகவும் உள்ள உங்களுக்கு நமஸ்கராம். தேர்களை ஓட்டுபவர்களாகவும் இழுத்துப்பிடித்து நிறுத்துபவர்களாகவுமுள்ள உங்களுக்கு நமஸ்காரம். தச்சர்களாகவும் தேர்செய்கிறவர்களாகவும் உள்ள உங்களுக்கு நமஸ்காரம்''

* * *

மிகப்பழைய உபநிடதமாகிய கடஉபநிடதத்தில் குதிரை பூட்டிய தேராக இவ்வுடல் உருவகிக்கப்படுகிறது.

''ஆத்மானம் ரதினம் வித்தி சரீரம் ரதமேவது/
புத்திம்து சாரதிம் வித்தி மனஃ ப்ரக்ரஹமேவச//
இந்த்ரியாணி ஹயானாஹுர் விஷயாம்ஸ் தேஷு கோசரான்/
ஆத்மேந்த்ரிய மனோ யுக்தம் போக்தேத்-யாஹுர் மநீஷிணஃ//''

(கடோபநிடதம் 3.3, 3.4)

இதன் பொருள்-


''சரீரத்தைத்தேராகவும் மனத்தைக் கடிவாளமாகவும் புத்தியைச் சாரதியாகவும் ஜீவனைத் தேரில் வீற்றிருப்பவனாகவும் அறி. இந்திரியங்களைக் குதிரைகள் என்றும் விஷயங்களை அவை செல்லும் பாதைகள்என்றும் கூறுவர்''.

* * *

இதிகாசங்களிலே மன்னர்கள் பயன்படுத்தும் தேர்களைப் பற்றிய பல செய்திகள் வருகின்றன. தேரைப்பயன்படுத்தி வீரப்போர் புரிவோருக்கு அதற்கேற்ற வகையில் பல்வேறு பட்டங்கள் வழங்கப் பட்டிருந்தன.

அதிரதன் — எண்ணிறந்த வீரர்களுடன் பெருந்தேரிலிருந்து போர் செய்பவன்.

மகாரதன் — தானொருவனாய்ப் பதினாயிரம் வீரரை எதிர்த்துப் போர் செய்பவன்.



மூலமூர்த்தி நடராஜராமலிங்கர்



ஆடி அமாவாசை கயிலாயதரிசனம்



மூலமூர்த்தி பர்வதவர்த்தனி



பண்டிகை புநருத்தாரணத் திருப்பணி



சப்பறத்திருவிழா எழுந்தருளி அம்மன்





நடராஜ மூர்த்தி



திருமணவாளக் கோலம்

சமரதன் — வேறொரு தேர்வீரனோடு சமமாகப் போர் செய்பவன்.

அர்த்தரதன் — போர்புரிந்து பின்னடையும் தேர்வீரன்.

* * *

பகவான் கண்ணன் அர்ச்சுனனின் தேர்ச்சாரதியாக அமர்ந்து தேரிலிருந்த படியே கீதையை உபதேசம் செய்தான்

* * *

புராணங்களிலும் பல்வேறு தேர்கள் பற்றிய செய்திகள் இடம் பெறுகின்றன. பூமியையே தேராகக் கொண்டு சிவன் முப்புரங்களை எரிக்கப் புறப்பட்ட செய்தி முக்கியமான ஒன்று. பிற்காலத் தமிழ்ப் புராணங்களிலும் திருமுறைகளிலும் இது பெரிதும் கூறப்படுகிறது.

* * *

ஆகமங்களைப் பின்பற்றியெழுந்த சிற்ப சாஸ்திர நூல்களிலே 'மானசாரம்' என்பது குறிப்பிடத்தக்கது. ஆலயங்களில் பயன்படுத்த வேண்டிய தேரின் இலக்கணங்கள் பற்றி இந்நூல் விரிவாக எடுத்துக் கூறுகிறது. இரண்டு முதல் ஒன்பது வரையிலான எண்ணிக்கை கொண்ட சக்கரங்களை உடைய பலவகையான தேர்கள் பற்றி நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

* * *

சைவ சித்தாந்த நூல்களிலும் தேர், உருவக விளக்கங்களாகப் பயன்படுத்தப் படுகிறது. உயிரானது உடலை இயக்கும் தன்மை, ஒரு பெரியதேர் தரையில் ஊர்ந்து செல்லுதல் போன்றது எனச் சிவஞான சித்தியார் கூறுகிறது.

'' தோற்பாவைக் கூத்தும், தொல்லை
மரப்பாவை இயக்கமும், சீர்த்
தேர்ப்பாரிற் செலவும் வேறாய்ச்
செலுத்துவோர் செய்தி தானும்
பார்ப்பாய வேடம் கட்டி
ஆடுவோர் பரிசும் போலும்
ஆர்ப்பாய காயம் தன்னை
ஆன்மாநின்று ஆட்டுமாறே?

( சித்தியார் - 214 )

' ஞானாமிர்தம் ' என்னும் சைவசித்தாந்த நூல் ஆன்மாவானது உடலாகிய தேரை ஊர்ந்து நின்று, உலகமாகிய மாடவீதிகளில் உழன்று திரிகிறது என உருவகித்துக் கூறுகிறது.

பாரதத்தில் பல ஆலயங்களிலே கற்றேர்ச் சிற்பங்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். பல்லவர் காலத்தில் மாமல்லபுரத்தில் அமைக்கப்பெற்ற எட்டு ரதக்கோவில்கள் குறிப்பிடத்தக்கன. பஞ்சபாண்டவர் ரதங்கள், கணேசரதம் முதலிய இவை தனிக் கற்களில் உருவாக்கப்பட்டவை.

மனுச்சோழனுடைய கற்றேர்ச்சிற்பமும் குறிப்பிடத்தக்கது. இது திருவாரூரிலே சோழர் காலத்தில் பத்தாம் நூற்றாண்டளவில் உருவாக்கப்பட்டது. ஒரிசா மாநிலத்திலுள்ள 'கொனாரக்' சூரியனார் கோயிலில் பன்னிரண்டு சக்கரங்களையும் ஏழுகுதிரைகளையும் கொண்டதாக அமைக்கப்பட்டிருக்கும் கற்றேர்ச் சிற்பம் 14 ஆம் நூற்றாண்டுக்குரியதென்பர்.

விஜயநகர மன்னர்களால் 15 ஆம் நூற்றாண்டில் செய்யப்பட்ட ஒரு கற்றேர் 'ஹம்பி' என்ற இடத்திலுள்ளது.

பழைய சில ஆலயங்களில் கருவறை அல்லது அதற்கடுத்த மண்டபம் தேர் போன்ற அமைப்புடன் காணப்படுகிறது. திருவதிகை, திருக்கடம்பூர்க் கோயில்கள் இத்தகையன. இன்னும் சில சிவாலயங்களில் நவக்கிரக சந்நிதானம் தேர்போன்ற அமைப்பில் உருவாக்கப்பட்டுள்ளது. (உ+ம் சுன்னாகம், கதிரைமலை சிவன் தேவஸ்தானம்)

தேர்போன்ற அமைப்பில் கட்டப்படும் ஆலயங்களைக் கரக்கோயில் என்பர். இது பற்றி அப்பர் தேவாரத்தில் உள்ளது.

''பெருக்காறு சடைக்கணிந்த பெம்மான் சேரும்
பெருங்கோயி லெழுபதினோ டெட்டு மற்றும்
கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற் கோயில்
கருப்பறியற் பொருப்பனைய கொகுடிக் கோயில்
இருக்காதி மறையவர்கள் வழிபட் டேத்தும்
இளங்கோயில் மணிக்கோயில் ஆலக்கோயில்
திருக்கோயில் சிவனுறையும் கோயில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் திரும் அன்றே.''

* * *

பழந்தமிழிலக்கியங்களாகிய சங்கநூல் களிலும் தேர் பற்றிய குறிப்புக்கள் பல காணப்படுகின்றன. நெடுநல்வாடை (வரி 75-78) புறநானூறு (4,200), பெரும் பாணாற்றுப்படை (வரி 488-490) சிலப் பதிகாரம் (நடுகற்காதை 222-225) முதலியன இதற்குச் சான்று. பாரிமன்னன் முல்லைக் கொடிக்கு தேர்கொடுத்தமை புகழ்பெற்ற செய்தியாகும். பழந்தமிழ் நாட்டில் பல சிற்பக்கலை நூல்கள் இருந்தனவென்று அறியப்படுகிறது.

* * *

சிறுதேருருட்டி விளையாடும் சிறுபிள் ளைகள் பற்றிப் பழைய இலக்கியங்களில் காணலாம். இன்றும் சிறுவர் அமைக்கும் ''குரும்பட்டித்தேர்'' குறிப்பிடத்தக்க ஒன்று. பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தத்திலே இடம்பெறும் பத்துப்பருவங்களுள் ஒன்று சிறுதேர்ப்பருவம் ஆகும். இதோ ஒரு பிள்ளைத்தமிழ்ப்பாடல்—

''ஆதிநூல் மரபாகி யதனுறும் பொருளாகி
அல்லவை யனைத்துமாகி
அளவினுக் களவாகி யணுவினுக் கணுவாய்
அனைத்துயிரு மாகி யதனின்
சாதியின் பிரிவாகி வெவ்வெறு சமயங்கள்
தானாகி நானாகிமெய்ச்
சாலோக சாமீப சாரூப சாயுச்ய
தன்னொளியி லீலையாகி
ஓதிய தனைதினு மடங்காமல் வேறாகி
உள்ளும் புறம்புமாகி
ஒளியிலொளி யாகிமற் றிரவுபக லற்றவிட
மொப்புவித் தெனையிருத்தித்
தீதினை யகற்றிநின் திருவருள் புரிந்தவா
சிறுதே ருருட்டி யருளே
சேவற்ப தாகைக் குமாரகம் பீரனே
சிறுதே ருருட்டி யருளே.''

— (பகழிக்கூத்தர் அருளிய திருச்செந்தூர்ப் பிள் ளைத் தமிழ்)

* * *

தென்னிந்தியாவிலே பத்தாம் நூற் றாண்டின் பின்னரே ஆலயங்களில் தேர்த் திருவிழாக்கள் நடைபெறலாயின எனச் சில அறிஞர்கள் கூறுகிறார்கள்.

ஐந்தாம் நூற்றாண்டின் தொடக்கத் திலே பாரதம் வந்துசென்ற சீன யாத்திரீ கன் பாகியான் எழுதிய யாத்திரைக்குறிப் புக்களில் இங்கு நடந்த தேரோட்டம் பற் றியும் காணப்படுகிறது.

* * *

வட்டமாகவும், சதுரமாகவும், அறு கோணமாகவும், எண்கோணமாகவும் அமைக்கப்படும் பலவகைத்தேர்கள் உள் ளன. ஆலயக் கட்டிட அமைப்பைப் போலவே இவற்றையும் நாகரம், திரா

விடம், வேசரம் எனப்பகுத்துக் கூறுவதுண்டு. மேல்பாகம் பல தட்டுக்கள் கொண்டதாகவும், கீழ்ப்பாகம் சிற்ப வேலைப்பாடுகள் கொண்டதாகவும் இருக்கும்.

பீடம்வரை மரத்தினால் சிற்பவேலைப்பாடுகளுடன் செய்து மேலே சீலைகள், மற்றும் தடிகள் ஆகியவற்றால் அலங்கரிக்கப்படும். கட்டுத்தேர்களே இந்தியாவில் அதிகம் உள்ளன. இவையே தேர்கள் எனவும் முழுமையாக மரத்தில் உருவாக்கப்படுபவை சித்திர ரதங்கள் எனவும் கூறப்படும்.

* * *

ஆலயங்களில் தேரிழுப்பதற்கென்றே சிலர் நியமிக்கப்பட்டு அவர்களுக்கு நிலம் தானமாக வழங்கப்பட்டமையும் அவர்களின் தலைவர்களுக்குப் பலசலுகைகள் வழங்கப்பட்டமையும் கல்வெட்டு மற்றும் இலக்கியச் சான்றுகள் மூலம் அறியப்படுகிறது.

* * *

கோயில் போன்ற ஓர் அமைப்பையே தேர் கொண்டுள்ளது. தேர்வடிவில் கோயிலும் கோயில் வடிவில் தேரும் அமைகின்றன. ஆலயத்தில் சென்று வழிபட முடியாதவர்களுக்காக அதேபோன்ற அமைப்புடைய தேரிலமர்ந்து இறைவன் அவர்களைத் தேடிவந்து காட்சி தருகிறான். 'அண்டத்திலுள்ளது பிண்டத்தில்' என்ற தத்துவத்துக்கமைய மனித உடல் போலவும் இப்பிரபஞ்சம் போலவும் தேர் உருவாகிறது. எப்பக்கத்தில் நின்று பார்த்தாலும் ஒரே வகையான தோற்றம் தருமாறு அமைவது தேரின் சிறப்பாகும்.

மேல்நோக்கி உயர்ந்து ஒடுங்கிச் சென்று கலசத்தில் நிறைவு பெறுவது உயர்ந்த சிந்தனையையும் மன ஒருமைப்பாட்டையும், இறை ஐக்கியத்தையும் குறிக்கின்றது. வெற்றிக் கொடிகள் உயர்வையும் குடைநிழல் இறையருட் பேற்றினையும் குறிப்பன.

இன்னொரு வகையில், சுவாலித்தெரியும் அக்கினிப் பிழம்பின் வடிவில் தேர் தோற்றமளிக்கிறது. தீமைகள் யாவற்றையும் சுட்டெரித்து விடுவதன் குறியீடு இது. நடேசப்பெருமானின் கையிலுள்ள அக்கினி அழித்தல் தொழிலைக் குறிப்பது போலத் தேர்த்திருவிழாவும் அழித்தல் தொழிலையே காட்டுகிறது.

* * *

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு நெறிகளையுமே நான்கு சக்கரங்கள் சுட்டுகின்றன. சக்கரங்களைத் தடுத்து நிறுத்திச் சரியான வழியில் செலுத்தும் சறுக்குக் கட்டைதான் சற்குரு.

* * *

தேர்ப்பீடத்தில் இறைவன் அமர்ந்ததும் தேர் ஓடுகிறது. இருதய பீடத்தில் இறைவன் இருந்தால் இயக்கம் சிறந்து விளங்கும்.

நான்குபேர் இழுத்தால் தேர் அசையாது; நாற்பது பேர் இழுத்தால் தேர் அசையும்; நானூறு பேர் இழுத்தால் தான் தேரோட்டம் நடக்கும். '' ஊர் கூடித் தேரிழுத்தல் '' என்பது இது தான்.

இந்துக் கலை, கலாசாரம், பண்பாடு ஆகியவற்றின் சின்னமாகவும் ஆன்மீக வாழ்வின் தத்துவ உட்பொருளாகவும் சமயவாழ்வின் பக்திச்சடங்காகவும் சமூக வாழ்வின் ஒற்றுமை நிகழ்வாகவும் அமையும் தேர்த்திருவிழா நமது உயிரோட்டம் மிக்க உயர் விழாவாகும். □

உ
சிவமயம்

# ஆவரங்கால் சிவன் திருத்தல வரலாறு

ஆதியில் ஐங்கரன் கோயிலே ஆவரங்காலில் இருந்தது. இது ஒரு மடாலயமாய் ஆசாரசீலமுள்ள பரம்பரை ஆலயபரிபாலனரால் பூசிக்கப்பட்டு வந்தது. புராணபடனம் முதலியன நடைபெற்றன. இது போர்த்துக்கேயரால் சீரழிக்கப்படாது தப்பியகோயில்.

பின் டச்சுக்காரர் காலமாகியது. முன்னைய விநாயகர் ஆலய உரிமையாளர் விசுவநாத உடையாரின் மருகரான இராமஉடையார் காசியிலிருந்து ஒரு சிவலிங்கத்தையும் ஒரு சிவப்பிராமண குடும்பத்தினரையும் கொண்டுவந்து சேர்த்தார். ''பல்வினையான் கொய்வளை'' எனப் பெயருள்ள காணியில் பழைய விநாயகர் பரிவாரமூர்த்தியாக அமையச் சிவாலயம் உருவாக்கிக் குடமுழுக்கு நடத்தினர்.

* காசியிலிருந்து வந்த கங்காபட்டர் வமிசத்தவர்கள் கோயில் நிலத்திலேயே குடியிருந்து பூசை, விழா முதலியன செய்து வந்தனர்.

* துறவியாகக் காசியாத்திரை சென்ற ஆச்சிமுத்து அம்மாவை இறைவன் ''ஆவரங்காலிலே தெருவிற் காசி இருக்கிறது. நீ அங்கேபோயிருந்து எம்மைவழிபட்டுப் பணிசெய்'' என்று ஏவினார். அவர் இங்குவந்து தங்கி ஆலயத்துக்கு வடபாலில் திருமடம், திருநந்தவனம், கிணறு என்பன அமைத்து இறைவனுக்குத் தொண்டு புரிந்திருந்து சிவகதி பெற்றார்.

* விநாயகர், சிவன், அம்பாள், முருகன் சந்நிதிகளோடு அமைந்திருந்த ஆலய நிலம் டச்சுக்காரர் ஆட்சிக் காலத்தில் சிவன்பேரில் ''தோம்பில்'' பதியப் பட்டுள்ளது. இதனால் இவ்வாலயத்தின் தொன்மை அறியப்படும்.

* காலத்துக்குக்காலம் ஆலயம் வளர்ச்சியுற்று வந்தது. இராம உடையாரின் பேரப்பிள்ளையான வாராத்தைப் பிள்ளை என்பவர் இவ்வாலய மண்டபங்களையும் கட்டுவித்து முழுமையான உருவில் இராசகோபுரத்தையும் அமைத்துத் திருப்பணியை நிறைவேற்றினார்.

* அதன் பின் அவரின் பரம்பரை உரிமையாளரான பொருத்தமானவர்கள் ஒருவர் பின் ஒருவராக நிருவாகம் நடத்தி வருகின்றனர். சுப்பிரமணியரும் அவர்மக்களான மயில்வாகனமும், அருணாசலமும் பின் க. சின்னத்தம்பியும் அதன்பின் உரிமைக்காரர் ஐவர் அடங்கிய தர்மகர்த்தா சபையும் நிருவாகத்துக்குப் பொறுப்பாக நடந்து வருகிறது.

* கங்காபட்டர் பரம்பரையில் பூசை உரிமையாளராக 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் நாகேந்திரக் குருக்களின் பிள்ளைகளான முத்தையாக்குருக்களும் சதாசிவக்குருக்களும் மேலும் சோமசுந்தரக்குருக்களும் பஞ்சநாதக்குருக்களும் சமகாலத்தில் பூசைபுரிந்து வந்தனர். பின் இவர்களின் பரம்பரையினரும் பூசித்தனர். இப்பொழுது இவர்கள்

வமிசவழித்தோன்றலான சிவஸ்ரீ வே. நடராஜக்குருக்களே பிரதமகுருவாகப் பணியாற்றுகிறார்.

* ஆலய வளர்ச்சியில் 1950 இல் நடராஜ மூர்த்தியும் ஆலயத்தில் தாபிக்கப் பெற்றார்.

* 1925 ஆம் ஆண்டு வரை அலங்காரத் திருவிழாக்களாகவே நடந்து வந்தது. 1926 ஆம் ஆண்டில் கொடித்தம்பம் நாட்டி முறையாக வருடாந்த உற்சவங்கள் நடந்து வருகின்றன. சிவனுக்கு ஆனி உத்தரம் அம்பாளுக்கு ஆடிப் பூரம் தீர்த்தமாக அமையப் பத்துப் பத்துத்திருவிழா நடக்கிறது.

* இடையிடையே கர்ப்பக்கிருகங்களிலே ஏற்பட்ட ஊனங்களால் பாலஸ்தாபனம் செய்து புனர்நிர்மாணத் திருப்பணிகளும் கும்பாபிஷேகங்களும் நடந்தன. 1945 இல் ஒரு கும்பாபிஷேகம் நிகழ்ந்தது.

* 1967 இல் பாலஸ்தாபனம் செய்த பின் சில ஆண்டுகள் புனருத்தாரண திருப்பணிகள் ஆரம்பமாகாமல் தாமதமாயிற்று. 1978 இல் ஒரு திருப்பணிச்சபை அமைத்து அதன் மூலம் திருப்பணி தொடங்கி நடந்து. 1982 யூன் 30 ஆம் திகதி (துந்துபிஸூஆனி மீ 16ஆம் திகதி) சிறப்பாகக் கும்பாபிஷேகம் நிறைவேறியது.

* இந்தப்புனருத்தாரண திருப்பணி சிறப்பானது. முழுக் கோயிலும் அத்திவாரத்தோடு பெயர்த்தெடுத்து முற்றிலும் புதிய கோயிலாக அமைக்கப்பட்டது. புதிதாக வைரவர் கோயிலும் நவக்கிரகக் கோயிலும் மணிக்கூட்டுக் கோபுரமும் புதிய மணியும் அமைக்கப்பட்டன. தொடர்ந்து சில மண்டபவேலைகளும் பூர்த்தியாகின.

* விநாயகர், சிவன், அம்பாள், முருகன் ஆகிய மூர்த்திகளுக்கான எல்லா விரத விழாக்களும் சிறப்பாக நிகழுகின்றன. ஒவ்வொன்றுக்கும் உரிய உபயகாரர் பக்தி சிரத்தையோடு செய்கின்றனர்.

* வருடாந்த மஹோற்சவத்தில் ஆரம்ப காலத்தில் தேர்த்திருவிழாவிற்கு வேறு கோயிலிலிருந்து இரவலாகத் தேர் கொண்டு வந்து தேரிழுத்தனராம். பின், சகடையில் மேலே தேர் போல அமைத்து இழுத்தனர்.

* பின் உடுப்பிட்டியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை ஆச்சாரியரைக் கொண்டு ஒன்றன்பின் ஒன்றாகச் சில ஆண்டு இடைவெளியில் இருதேர்கள் செய்விக்கப் பெற்றன. 1952 இல் செய்விக்கப் பெற்ற தேரே இன்னமும் பாவனைக்குரியதான நிலையிலுள்ளது.

* எனினும் இவ்வழகிய அருள்வளர் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள பெருமான், அழகுமிகு சித்திரப் பொற்றேரில் எழுந்தருளிப்பவனிவரக் காண வேண்டும் என்ற ஆர்வம் அன்பர்கள் உள்ளங்களில் அரும்பி வளர்ந்து வந்தது.

* அதன் விளைவாக 1993 ஆம் ஆண்டு புதிய சித்திரத்தேர் உருவாக்குவதென ஊர்மக்கள் தீர்மானித்தனர். ஒரு தேர்த் திருப்பணிச்சபையும் தேர்ந்தெடுக்கப்பெற்றது

* இத்தேரை நிர்மாணிப்பதற்கு திருநெல்வேலியைச் சேர்ந்த திரு. சீவரத்தினம் அவர்களின் புதல்வர் ஜெயப்பிரகாஷ் (சிற்பசக்கரவர்த்தி)என்பவரைத் தெரிவு செய்து பணி ஒப்படைக்கப்பட்டது.

ஸ்ரீபர்வதவர்த்தனி சமேத ஸ்ரீநடராஜ ராமலிங்கப் பெருமானது திருவருள் துணை

நின்று செய்விக்கத் தேர்த்திருப்பணி நிறைவாகியது.

இன்று 28-6-95 அப்பெருமானின் அருள்வழியே சிவபிரானது திருவருளாகிய திருவாதிரையிலே தேர் வெள்ளோட்டம் நிகழ்கிறது.

* தரிசிக்கும் எல்லார்க்கும் மனம் நிறைகிறது.

எம்பிரானும் இரதாரூடராய் உலாவருவார்.

எழுந்தருளி எங்குறை தீர்ப்பார், மங்களம் நிறைப்பார்.

மேன்மை கொள்சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்.

தன்னை யறியத் தவமுனுற்றும் மாதவரை
அன்னையைப்போ லாதரிக்கு மாறுமுகன் — சந்நிதியில்
தேரடியில் தேசிகனை கண்டு தெரிசித்தேன்
தேரடா வுள்ளென்றான் சிரித்து.

—சிவயோகசுவாமிகள்

பண்டிதர் ச. சுப்பிரமணியம்
தலைவர், சிவன் தேவஸ்தான
தர்மகர்த்தா சபை

# சிவன் தேர்

தலம் — திருமுதுகுன்றம்

பண் — மேகராகக் குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

வெம்மைமிகு புரவாணர் மிகைசெய்ய விறலழிந்து விண்ணுளோர்கள்
செம்மலரோன் இந்திரன்மால் சென்றிரப்பத் தேவர்களே தேரதாக
மைம்மருவு மேருவிலு மாசுணநாண் அரிஎரிகால் வாளி யாக
மும்மதிலும் தொடியளவில் பொடிசெய்த முதல்வனிடம் முதுகுன்றமே

—திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் தேவாரம்

திருச்சிற்றம்பலம்

என்னும் தேவாரம் சிவன் தேர்பற்றிச் சுருக்கமாகக் கூறுகிறது. திரிபுர விஜயத்தின் பொருட்டே சிவன் தேரூர்ந்து சென்றார். ஏனைய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இடப வாகனம் ஊர்ந்து செல்வதே இயல்பாகும்.

தாரகாசுரன் மக்கள் தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி என்னும் மூவர் பிரமனை நோக்கித் தவம் புரிந்து பெரு வரங்கள் பெற்றனர். அவர்கள் சார்பில் மூன்றுகோடி அசுரர் இருந்தனர். அவர்கள் யாவரும் பொன், வெள்ளி, செம்பினாலே மயனென்னும் தேவதச்சன் செய்து தவிய (பறந்துதிரியும் இயல்புள்ள) மூன்று கோட்டை – நகரங்களில் வசித்தனர். மூவுலகினருக்கும் முடிவில்லாத் துன்பங்களை விளைவித்து வந்தனர். அதனைத் தாங்க மாட்டாத அயனும் அரியும் மற்றும் அமரரும் சிவனிடம் சென்று முறையிட்டனர். சிவபெருமான் தேவர்களை ஒரு தேர் அமைத்து வருமாறு பணித்தார். பிரமாவும் தேவதச்சனான விசுவகர்மாவும் சேர்ந்து உலகத்தையும் உலகிலுள்ள உயர்ந்த சிறந்த பொருள்களையும் சேர்த்து ஒருதேரை உருவாக்கினர்.

இத்தேரின் அமைப்புப்பற்றி, சிவமஹாபுராணத்திலும், மச்சபுராணத்திலும், காந்தபுராணம், உபதேசகாண்டத்திலும் கூறப்படுகிறது. கூடவே திரிபுரதகனப்போர் நிகழ்ச்சியும் சொல்லப்படுகிறது. தேரின் உறுப்புக்கள் அமைந்த வகைபற்றி ஒன்றுக்கொன்று சிறிதளவான வேறுபாடுகள் இருப்பினும் பெரும்பான்மை ஒத்திருக்கின்றன. தேரமைவு பற்றிய முக்கிய விஷயங்கள் வருமாறு:

1. தேர்ச்சக்கரங்கள் (சில்லு) —
சூரிய சந்திரர்கள்.
2. தேரின் அச்சு —
மந்தரம் கேசரி ஆகியவை.

3. கீழேழு மேலேழுதட்டுகள் —
கீழேழு மேலேழுஉலகங்கள்.

4. சிவன் வீற்றிருக்கும் சிம்மாசனம் —
பூமியாகிய தட்டில் அமைந்தது.

5. கடைப்படச் செல்லுத்தரப்பினை —
கலை, ஆகமம், வேள்வி, பருவகாலம் மந்திரம், ஓரை, நட்சத்திரம், யோகம்

6. தேரைச்சுமப்பன —
திக்கு யானைகள் எட்டு.

7. தூண்கள் (பவளக்கால்) —
குலமலை எட்டு சக்கரவாளமலை எட்டு நாகம்.

8. கன்னசாலை கன்ன கூடங்கள் —
பஞ்சவர்ணமும் சமுத்திரங்களும்.

9. மேலே கட்டும் படாம் (வெள்ளை) —
சிவப்பு, கறுப்பு, வெள்ளை, பச்சை, குங்கும வர்ணங்களிலுள்ள படாம் கீழே புறவாழிச் சமுத்திரமாகிய படாம்.

10. கொடிஞ்சி —
பேரொளி ஐந்துங்கொண்டமைந்தது.

11. கொடிஞ்சியிலிருந்து தூங்கும்மணி —
சரசுவதி.

12. தசும்பு (குடம்) —
நவமணிகள் இழைத்த பொன்னாலாயது.

13. குதிரைகள் —
நால்வேதங்கள்

14. சிவன்கையில்பிநாகம் —
மேருமலை, நாண் - வாசுகி, அம்பு - விஷ்ணு, அம்புமுனை - அக்கினிதேவன், அம்பின் இறகுகள் - வாயுதேவன்.

15. தேர்ச்சாரதி —
பிரமதேவர்.

16. குதிரையை ஓட்டும் மத்திகை —
பிரணவம்.

ஆக இவ்வாறமைந்த தேரை ஆலய முகப்பில் கொண்டு வந்து நிறுத்தினர். இறைவனிடம் தேர் தயார் என்று சென்று அறிவித்தனர். பெருமானும் அம்மையோடு எழுந்தருளி வந்து தேரை அணுகினார். தேவர்கள் யாவரும் போற்றத் தேர்மீது திருவடிவைத்தார். இறைவன் திருவுள்ளம் யாரறிவார். ''எல்லாம் இறைவன் செயலே'', ''அவனின்றி அணுவும் அசையாது'', ''ஓட்டுவித்தால் ஆர் ஒருவர் ஓடாதாரே'' என்ற அருள் வாக்குகளுக்கு அமைய ஒரு திருவிளையாடலே நிகழ்த்தினார். சுவாமியின் சுமையைத் தாங்கமாட்டாது தேர்த்தட்டும் அச்சும் தளர்ந்து தள்ளாடியது.

அதுகண்ட திருமால் இடபமாகித் தேரைத்தாங்கிக் கொண்டார். பின் பிரமா குதிரைகளைத் தூண்ட அவையும் இழுத்துச் செல்ல மாட்டாது இளைத்து நின்றன. அப்போது எல்லோரும் விநாயகப் பெருமானை வேண்ட அவருடன் குமரப் பெருமானும் அங்கு வந்து சேர்ந்தனர். அதன்மேல் தேர் ஓடியது. முப்புரங்களும் ஒன்று சேரும் மூர்த்தத்தில் ஒன்று சேர்ந்தன. தேவர்கள்சிவனைத்துதித்து அம்பை விடுத்து முப்புரங்களையும் அழிக்கும்படி வேண்டினர். பெருமான் புன்னகை செய்தருளவே முப்புரங்களும் தீப்பற்றி எரிய முக்கோடி அசுரரும் அப்புரத்தோடு எரிந்தனர்.

அப்படி எல்லாம் எரியும் போது முப்புரத்துத் தலைவர்கள் சிவபத்தர்களாயும் சிவபூசை நியமம் தவறாதவர்களாயும் இருந்தமையால் எரியாது பிழைத்தனர். இதனை ''மூவார் புரங்கள் எரித்த அன்று மூவர்க்கருள் செய்தார்'' என்று சம்பந்தர்

திருவண்ணாமலைப் பதிகத்தில் குறிப்பிட்டருளினார். மூவரில் இருவர் கோயில் வாயிற் காவலராயினர். ஒருவர் குடமுழா வாசிக்கும் நந்தீஸ்வரராயினார்.

திரிபுர தகனம்பற்றி மணிவாசகரும் திருவுந்தியார் என்ற பதிகத்தில் முதல் நான்கு பாடல்களிலும் குறிப்பிடுகிறார். 2 ஆம் பாடலில் அம்பெய்யாமலே திரிபுர தகனம் செய்ததும், 3ஆம் பாடலில் திருவடி வைத்தேறத் தேர் தளர்ந்ததும், 4 ஆம் பாடலில் மூவர் காப்பாற்றப்பட முப்புரம் எரிந்ததும் சொல்லப்படுகின்றன. 3 ஆம் பாடற்செய்தி முன்குறிப்பிட்ட மூன்று புராணங்களிலும் விரிவாகக் கூறப் பெற்றுள்ளன.

இத்தேர் பற்றித் திருமுறைகள் பலவற்றிலும் ''வைதிகத்தேர்'' என்று நாமம் கூறப்படுகிறது. சிதம்பரத்தில் ஒரு முறை தேர் ஓடாமல் தடைபட்டு நின்றதாயும் சேந்தனார் திருப்பல்லாண்டு பாடத் தேர் ஓடியதான ஒரு அற்புதச் செயலும் உண்டு. திருவாரூர்த்தேரே சிறந்த பெரிய தேராக மதிக்கப் பெறுவது. அப்பெருமானின் ஆழித் தேர்விழாவினைப் போற்றுவர். மேலும் கந்தசுவாமியார் சூரனுடன் போராடச் செல்வதற்குச் சிவபெருமான் அருளிய தேருக்கு ''மநோவேகப்பொற்றேர்'' என்று பெயர். சிவபிரான் சூரனுக்கு வரம் கொடுத்த போது வழங்கிய தேருக்கு ''இந்திரமாஞாலத்தேர்'' என்று பெயர். இதுமாயம் பல வல்லது. சாரதியின்றியே தலைவனின் எண்ணம் போல இயங்கக் கூடியது. இப்படிப் பல வேறு பெயர்கள் உள்ள தேர்கள் இதிகாச புராணங்களிலே சொல்லப்படுகின்றன.

அதிசிறப்பாற்றல் பெற்ற வீரர்களே தேரேறிப் போராடக்களம் புகுவர். அவர்களையும் திறமை அடிப்படையில் ''அர்த்தரதர், அதிரதர், மஹாரதர்'' எனத் தகுதிகண்டு பெயரிட்டழைப்பர். இவ்வாற்றால் தேர் என்ற ஊர்தி, யானை குதிரை முதலிய மற்றைய ஊர்திகளிலும் உயர்ந்ததென்பது தெளிவாம்.

திரிபுர விஜயம் பற்றி அப்பர்சுவாமிகள் திருநாகைக்காரோணப்பதிகத்தில் 2 ஆம் பாடலில் கூறும் கருத்தையும் சிந்திக்கலாம்.

திருச்சிற்றம்பலம்

''கற்றார் பயில் கடல் நாகைக்
காரோணத்தெங் கண்ணுதலே
விற்றாங்கியகரம் வேல்நெடுங்கண்ணி
வியன்கரமே
நற்றாள் நெடுஞ்சிலை நாண்வலித்
தகரம் நின்கரமே
செற்றார் புரஞ்செற்ற சேவகம்
என்னைகொல் செப்புமினே''

திருச்சிற்றம்பலம்

என அர்த்தநாரீ ஈசுவரராக இறைவன் சென்றதையும், இடப்பாலிலுள்ள அம்மை கையில் மலைவில் இருந்ததையும் சிவனது வலதுகை நாணேற்றியதையும் குறிப்பிட்டுத் திரிபுர விஜயத்தில் அம்மைக்கே கூடிய உரிமை உள்ளதென்கிறார்.

இவ்விடயம் பற்றிச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடிய திருப்புன்கூர் பதிகத்து 8ஆம் பாடலில் உள்ள செய்தியும் கவனிக்க வேண்டியது.

''மூவெயில் செற்ற ஞான்றுய்ந்த மூவரில்
இருவர் நின்திருக்கோயிலின் வாய்தல்
காவலாளரென் றேவியபின்னை ஒருவன்
நீகரி காடரங்காக
மானை நோக்கியோர் மாநடம் மகிழ
மணிமுழா முழக்கவருள் செய்த
தேவ தேவநின் திருவடி அடைந்தேன்
செழும்பொழில் திருப்புன்கூருளானே''

என்பதில் முப்புரத்தில் எரியாது பிழைத்த மூவர் பேறும் கூறப்படுகிறது.

மணிவாசகப்பெருமான் திருவுந்தியாரில் கூறிய செய்தியின் மேலும் திருத்தோணோக்கத்து 9ஆம் பாடலிலும் திருச்சாழல் 15ஆம் பாடலிலும் திரிபுர விஜயகாலமும் திருமால் இடபமாய்த் தாங்கியதும் கூறுகின்றார்.

அவையாவன:

''எண்ணுடை மூவர் இராக்கதர்கள் எரிபிழைத்துக்
கண்ணுதல் எந்தை கடைத்தலைமுன் நின்றதற்பின்
எண்ணிலி இந்திரர் எத்தனையோ பிரமர்களும்
மண்மிசை மால்பலர் மாண்டனர்காண் தோணோக்கம்''

''கடகரியும் பரிமாவும் தேருமுகந் தேறாதே
இடபம்உகந் தேறியவா றெனக்கறிய இயம்பேடீ
தடமதில்கள் அவைமூன்றும் தழலெரித்த அந்நாளில்
இடபமதாய்த் தாங்கினான் திருமால்காண் சாழலோ''

என இவ்வாறு தமிழ் வேதமாகிய திருமுறைகளிலும் புராணங்களிலும் சிவன்தேர் பற்றிய செய்தி ஓரேவிதமாகச் சொல்லப் பெற்றிருப்பது காணலாம்.

தென்னாடுடைய சிவனே போற்றி.

காரார் குயில்பாடக் கார்வண்டு பண்பாட
ஆராத காத லடியாரெல்லாஞ் — சீராகச்
சென்னயிலே கைகுவித்தார் தேரடியில் தேசிகனை
என்னையவன் பார்த்தான் இனிது.

—சிவயோகசுவாமிகள்

சிற்பச் சக்கரவர்த்தி
ஆறுமுகம் ஜீவரட்ணம் ஆச்சாரியார்

# தேரின் அமைப்பு விதிகள்

தமிழ் மக்களின் பண்பாட்டுப்பாரம் பரியங்களுடன் ஒன்றிணைந்த ஓர் கலைப் பொருளாகத் தேர் காணப்படுகின்றது. (மிகப்பழங்காலத்தில் இருந்தே தேர், தமிழ் நாட்டில் இருந்திருக்கின்றது என்பதற்குச் சங்க இலக்கியங்களிலே சான்றுகள் பலவுள) சக்கரம், (சில்லு) பாவனைக்குவரத் தொடங்கி அவற்றின் படிப்படியான வளர்ச் சிக்கட்டத்திலே தேர் உருவாகியிருக்கலாம் என்று ஊகிக்க முடிகின்றது.

இருக்கு வேதத்திலே தேர்பற்றிய தகவல்கள் காணப்படுகின்றன. தேரின் பாவனை, அதன் உறுப்புக்கள் பற்றிய பல விபரங்களை இருக்குவேதம் சொல்லுகின்றது.

உபநிடதங்களிலும் தேர், தேர்ப்பாகன், பற்றிய தகவல்கள் கிடைக்கின்றன. மிகப்பழங்காலத்தில் இருந்தே தேர்ப்பாவனை, தேர்ப்பண்பாடு இருந்துவந்திருக்கின்றது என்பது தெளிவாகின்றது.

தேவர்களும், அரசர்களும், அமானுஷியர்களும், வீரர்களும் தேர்களிலே உலா வந்தமைக்கான சான்றுகளைப் புராண இதிகாசங்களிலே காணமுடிகின்றது. புராண இதிகாசகாலத்தின் மிக முக்கியமான ஊர்தியாகத் தேர்விளங்கியிருக்கின்றது.

தேரைக் குதிரைகள், யானைகள் இழுத்துச் சென்றுள்ளன. குதிரைகள் பூட்டியதேர், என்ற தொடர் பழந்தமிழ் இலக்கியங்களிலே பலவிடங்களிலும் இடம் பெற்றுள்ளது. தேரிற்பூட்டிய குதிரைகளின் சிறப்பும், அழகும், வேகமும் இவ்விலக்கியங்களிலே விதந்து பேசப்பட்டுள்ளன.


மனிதர்கள் தாம் உபயோகித்த ஓர் ஊர்தியை, தாம் வணங்கும் தெய்வத்திற்குச் சமர்ப்பணம் செய்திருக்கலாம். இதனாலே காலப்போக்கில் தேர் தெய்வசம் மந்தமுடையதாக மாறியிருக்கக் கூடிய வாய்ப்பு உண்டு.

தேர்கள் மரத்தினாற் செய்யப்பட்டமையினாலே அவை காலப்போக்கில் அழிந்தொழிந்து போயின. தமிழ்நாட்டின் பழைய அரசர்களின் அரண்மனைகளையோ, வாழிடங்களையோ பேணிப்பாதுகாக்க முடியாமற் போனது போலவே பண்டைக்காலத்துக்கலைப்பொருட்கள் பலவற்றை (சிறப்பாக மரத்தினாலானவை) எமது பாரம்பரியம் பேணிப்பாதுகாக்க வில்லை. இதனால் பழந்தமிழ்க் கலைப் பொக்கிஷம் பலவற்றை நமது பண்பாடு இழந்துவிட்டது என்றே கருதவேண்டும்.

இலக்கியம் கண்டு அதற்கு இலக்கணம் அமைத்த சமூகம் பலவகைத் தேர்களையும் கண்டு பின்னர் அதற்குரிய அமைப்பு விதிகளையும், முறைமைகளையும் அறிமுகப் படுத்தியிருக்கலாம்.

சிற்பக்கலைகள் பேணிப்பாதுகாக்கப் படாமை போலவே சிற்பக்கலைஞர்களின் ஆற்றலை வெளிப்படுத்தும் வகையில மைந்த சிற்பமுறைமைகள் பற்றிய விபரங்கள், அவர்களது வாழ்க்கை வரலாறுகள், தொழில் நுட்பத்திறன்கள், அழகியல்


ஒவ்வொரு சுவாமிகளுக்கும் அமையவேண்டிய
சித்திரத் தேர் அமைப்பின் கிடைப்படங்கள்



அம்பிகை: எண்கோண வடிவம்
நவகோண வடிவம்

முருகன்: ஆறுகோண வடிவம்
எண்கோண வடிவம்

பிள்ளையார் சுவாமி: வேஸரஸ வடிவம் எண்கோண வடிவம்



சிவன்:
சதுர பூணாந்திர வடிவம்

சண்டேஸ்வரம்:
சதுரவடிவம்

வீரபத்திரர் வயிரவர்:
நீள் பூசாந்திர வடிவம்

வெளிப்பாடுகள் பற்றிய தகவல்களையும் நமது இலக்கியப் பாரம்பரியம் முழுமையாகப் பேணிப் பாதுகாக்கவில்லையென்றே கருத வேண்டும்.

கோயிற் பண்பாட்டுடன் இணைந்த கலைக்கோலங்கள் பலவற்றிற்கும் இத்தகைய நிலையே காணப்படுகின்றது எனலாம். பல்லவர் சோழர் காலங்களுக்குரியதாகப் பேசப்படும் ஒரு சில கல்வெட்டுக்கள், செப்பேடுகள் மாத்திரம் சிற்பக்கலைஞர்களுக்கு நிவந்தங்கள் வழங்கப்பட்டமையைத் தெரிவிக்கின்றன?

மரச்சிற்பத் தேர் கல் தேராகவும் செதுக்கப்பட்டமை இக்காலப் பகுதியிலேயேயெனக் கருதலாம். மரச்சிற்பக்கலை இயற்கையாலும் செயற்கைச் சக்திகளாலும் அழிந்து போவதைக கண்ட கலை ஆர்வலர் மரத்தேர் அமைப்பினை அப்படியே கல்லிற் செதுக்கிப் பாதுகாக்கக் கருதியிருக்கலாம். இன்றும் இந்தியாவிலே (சிறப்பாகத்திருவாரூரிலே) கல் தேர்களைக் காணமுடியும். ஒரிஸா, கொன்னாரக் ஊரிலுள்ள சூரியன் கோயில் கல்தேர் உலகப் புகழ்பெற்றது. தமிழ்நாட்டுத் தொடர்புடைய கலிங்க அரசனே இக் கல், தேரைச் செதுக்குவித்தான் என்பர்.

சிற்பக்கலை, சிறப்பாக மரச்சிற்பக் கலை தமிழ்நாட்டிலே மிகப்பழங்காலத்தில் போற்றப்பட்டு வந்துள்ளது. தமிழ்நாட்டின் சமய, சமூக, அரசியற் காரணிகள் கலைஞர்களைத் தொழிலாளர்களாகக் கணிக்கத் தொடங்கியதன் பின்னரே தமிழகக்கலைகள் நலியத் தொடங்கின எனலாம்

''ஏவுதற்கருத்தா'', இயற்றுதற் கருத்தா என்ற இறுக்கமான தமிழ்நாட்டுச் சமூகமரபு தமிழ்க் கலைகளின் வீழ்ச்சிக்கே வழிவகுத்தது எனலாம்.

முற்றுமுழுக்கக் கலைப்படைப்பாகவும் தொழில் நுட்பத்திறனின் வெளிப்படைப் பாகவும் விளங்கிய தேர்மரபு சமயத்துடன் சங்கமமாகிச் சமயச் சார்பான ஓர் கலை வடிவமாக மெல்ல மெல்ல நிலைபெறத் தொடங்கியது. தமிழ்க்கலை வரலாற்றிலே சிற்பம், சித்திரம், இசை, நடனம் முதலிய எல்லாக் கலைகளுக்கும் சமயச் சார்புடனேயே நிலை நிறுத்தப்பட்டன எனக் கருதலாம்.

தேர் சிற்பக்கலையையும் தொழில் நுட்பத்திறனையும் உள்வாங்கிவரும் பொழுது சமயதத்துவங்களின் உறவுக்குரியதாகிச் சில தத்துவார்த்தங்களுக்கு உள்ளாக்கியது.

தத்தம் வசதிக்கும், வர்க்கங்களுக்கும் ஏற்பத்தத்துவம் கற்பிக்கப்பட்டமையைத் தேரின் வரலாறே துல்லியமாகக் காட்டி நிற்கின்றது.

தேரின் அமைப்பு, அளவுகணக்கு என்பன அனுபவஸ்த்தர்களாலும், அறிஞர்களினாலும் வரையறை செய்யப்பட்டுள்ளது.

சைவ சமயச் சூழலில் கட்டுத்தேர், சித்திரத்தேர், எனப் பல்வேறு வகையுண்டு இவ்வாறே முழுத்தேர், அரைத்தேர், காற்தேர், எனச் சில அளவுகளும் உண்டு.

மானசாகரம் என்ற சிற்பநூலிலே தேரிற்குரிய இலக்கணம் கூறப்பட்டிருக்கின்றது. தேரின் அமைப்பு, அதன் அளவு, அதன் வேலைப்பாடுகள், அதற்குப் பயன்படுத்தப்படும் மரங்கள் முதலான பல்வேறு கருத்துக்களையும் சிற்பசாஸ்திரங்கள் கூறிநிற்கின்றன.

தேர், இரதம், என்னும் சொற்கள் இன்று ஒருபொருட்குறிக்கும் சொற்களாகக் கருதப்படுகின்றன. சிற்பசாஸ்திர விதிப்

படி, தேர் வேறு. இரதம் வேறு. மஞ்சம் வேறு. பிறவாயாக்கைப் பெரியோனாகிய சிவனுக்குப் பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தம் பாடுவதில்லையென்று பாட்டியல் இலக்கணநூல்கள் கூறுகின்றன. இவ்வாறே சிவனுக்குத்தேர் செய்யும் பொழுது மிகுந்த கவனத்துடன் செய்ய வேண்டும் என்று கூறுவர்.

சில்லுத் தொடக்கம், கோபுரகலசம் வரை ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஒவ்வொரு அளவுப் பிரமாணத்தினைச் சிற்பசாஸ்திரத்திலே சொல்லியிருக்கிறார்கள். அழகியலமிசங்களை உள்வாங்கிய போதிலும தேரிற் செதுக்கப்படும் சிற்பங்களுக்கும் சில அளவுப் பிரமாணங்களும் சமய நம்பிக்கைத் தன்மைகளும் பேணப்பட்டு வருவதும் அவசியமாகும்.

தேர் நிர்மாணிக்கும் இடம், திசை, அதற்குரிய மரங்களைத் தெரிவு செய்தல் என்பவற்றிலேயும் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். வேலை ஆரம்பிப்பதற்குரிய நாள், திதி, நட்சத்திரம் முதலியனவற்றையும் மங்கலநாள்களாகத் தெரிவு செய்யவேண்டும் என்பர். இறைவனுக்குத் தேர் இயற்றும் காலத்தில் சிற்பாசாரியர்கள் ஆசாரசிலர்களாக இருக்க வேண்டும் என்று கருதப்படுகின்றது.

சமய தத்துவங்கள் தேர்பற்றிய பல தத்துவ விளக்கங்களைத் தருகின்றன.

தேர் என்பது ஒரு கோயிலின் அமைப்புப் போன்றது என்றும் கோயிலுக்கு வந்து வணங்கும் அடியார்களுக்காகவும், வரவசதியில்லாதவர்களுக்காகவும், அருளும் பொருட்டு' கோயிலே' எழுந்தருளி வருவது போன்ற வகையிலே இத் தேரின் தத்துவம் அமைந்திருக்கின்றது என்று கலைக்களஞ்சியம் கூறும்.

கோயிலின் அமைப்புப் போன்ற தேரின் அடிப்பாகம் பூலோக வாழ்க்கையையும், மேற்பாகம் சுவர்க்க வாழ்க்கையையும் சித்திரிக்கின்றது என்று கூறுகின்றனர்.

மனிதனின் தேகத்தை உருவகிக்கும் ரீதியில் தேர் அமைந்துள்ளது எனவும் அதன் சிங்காசனமே மனித இருதயத்தின் பிரதியமிசம் எனவும் கூறப்படுகின்றது.

ஆலயங்களில் நிகழும் தேர் விழா சம்காரத்தைக் குறிப்பதாகவும் கூறப்படுகின்றது.

மேற்காட்டியவாறு பலவகையான தத்துவங்களையும் தேர்பற்றியும், தேர்விழா பற்றியும் கொண்டிருந்த போதிலும் ஓர் சமூகவியற்காரணியும் உண்டு எனக் கருதலாம். தேர் மிகவும் பெரியதாக இருப்பதால் ஊரவர்கள் யாவரும் ஒன்றுதிரண்டு தேரிழுப்பர். ''ஊரெல்லாம் கூடி ஒருதேர் இழுக்கும்'' பொழுது கோயிற் கடமைகளில் பார்வையாளர்களாக இல்லாமல் அனைவரும் பங்காளர்கள் ஆக மாறுகின்றன. சமூக ஒற்றுமையின் வெளிப்பாடாகவும், ஒரு பொதுக்கருமத்தில் எல்லோரும் பங்காளர்களாக மாற வேண்டும் என்ற சமூகதத்துவத்தினையும் தேர்த்திருவிழா எடுத்தோதுகின்றது எனலாம்.

குதிரைகள் இழுத்த தேரின் வரலாற்றை சிற்பத்தாற் செதுக்கப்பட்ட குதிரைகள் பூட்டப்பட்டுள்ளமை தெளிவாக்குகின்றது. கிராமமே கூடி இழுக்கும் பொழுது ஓர் ஒற்றுமையுணர்வு பக்திப் பாரம்பரியத்தினூடு புலப்படுவதை அவதானிக்கலாம்.

தேரைக் கொண்டு செல்லும் 'பொறி' முறையாக அமைவது 'கட்டைபோடுதல்' எனக் கூறப்படும் முட்டுக்கட்டை கொடுத்தலாகும். வீதியிலே தேர் நேர்த்தியான முறையிலே செலுத்தப்பட இக் கட்டை போடுபவர் புத்திசாதிரியமுள்ள அனுபவஸ்த்தராகவும், உடல், உளப்பலம் கொண்டவராகவும் இருக்க வேண்டியதும் அவசியமாகும். 'கட்டைபோடுவதும்' ஒரு கலை

தான். அதற்குத் தனித்திறமை வேண்டும். தேரை ஓட்டிச் செல்லும் சாரதியைப் பாகன் என்று அழைப்பர். யானையைக் கொண்டு நடத்துபவரையும் பாகன் என்று அழைப்பர். தேர்ப்பாகன், யானைப்பாகன் என்ற சொற்களில் இருந்து தேர் செலுத்துவதிலுள்ள கஷ்டங்களை ஊகித்துக் கொள்ளலாம். பாரதப்போரில் கண்ணன் தேர்ப்பாகனாக வந்தான் என்பதும் ஒரு வகைக்கு குறியீடு என்று கூடக் கருதலாம்.

இப்பொழுது ஆலயத்தேரினைக் கொண்டு செலுத்துபவர் 'கட்டைபோடுபவரே' யாவர். அடியார்கள் பக்தியுணர்வினாலீர்க்கப்பட்டுக் கட்டுப் பாடுகளைக் கடந்து இழுத்தாலும் தேரைக்கட்டுப் படுத்தி ஒரு நெறியிற் செலுத்தக்கூடிய திறமை 'கட்டைபோடுபவருக்கு' இருக்க வேண்டும். இது எமது பாரம்பரியத் தொழில் நுட்ப அறிவாக அனுபவ ரீதியிலேயே அமைந்துள்ளது.

ஆலயங்களில் தேர் செய்து இறைவனை ஏற்றி உலாவருவதற்கு முன் அத்தேரினை நிர்மாணித்த சிற்பியை அத்தேரிலே ஏற்றி வீதியுலாவாக இழுத்து வருவர். இது இன்று ஒரு சடங்காசாரமாகக் கருதப்படுகின்றபோதிலும், இதில் மூன்று முக்கிய அம்சங்கள் அடங்கியிருக்கின்றன என்று கருதலாம். அவையாவன:

அ) விஷ்வசர்மா உள்ளிட்ட தேவர்களுக்குத் தேரினைச் சமர்ப்பணம் செய்தலும், அவர்களுக்குப் பிரியமான சடங்காசாரங்களை நிகழ்த்துதலும்.

ஆ) தேரை நிர்மாணித்த சிற்பியை, சிற்பக் கலைஞர்களைக் கௌரவித்தல்.

இ) தேர் நல்லமுறையில் அமைந்துள்ளதா, சரியாக ஓடக்கூடிய நிலைமையில் உள்ளதாஎன்பதைப் பரீட்சித்துப் பார்த்தல்.

இம் மூன்று காரணிகளையும் விட வேறு காரணிகளும் இருக்கலாம். ஆனால் இன்று தேர் வெள்ளோட்டம் என்பது ஒரு சடங்காகவும் மாறிவருகின்றமையையும் அவதானிக்கலாம்.

தேர்க்கலை ஒரு கூட்டுக்கலை. இதிலே பஞ்சகம்மாளர் என்று கூறப்படும் ஐவகைக் கலைஞர்களும் சிறிதும் பெரிதுமான பங்களிப்பினைச் செய்வர் அத்துடன் இன்று சைத்திரிகர்கள் எனப்படும் ஓவியர்களின் கைவண்ணத்தினையும் சித்திரத்தேர்கள் பெற்றுத்திகழுகின்றன.

தமிழ் ஈழத்திலே தலைசிறந்த சித்திரத் தேர்கள் உருவாகியுள்ளன. இன்னும் அறிய வேண்டிய பலவுள என்ற எண்ணப் பாங்குடன் சிற்பக்கலைஞர்கள் செயற்பட வேண்டும். அவ்வாறு செயற்பட்டால் மிகச் சிறந்த கலைப்படைப்புக்களைத் தமிழ் ஈழம்காணும்.

தகவல்களுக்காகப் பின்வரும் சில விபரங்களைக் கீழே தருகின்றோம்.

மகாபலிபுரச் சிற்பக்கல்லூரி அதிபர் சிற்பவல்லுநர் ஸ்தபதி உயர் திரு. வை. கணபதி அவர்களின் ஆய்வுப்படி:

பிள்ளையாருக்கு: 7'—8"—9' - 1"
(கால்பிரவாய்-கர்ப்பக் கிரகம்)
முருகனுக்கு : 9'—4" — 8'—9"
அம்மனுக்கு : 9'—4" — 9'—5" – 11—3"
சிவனுக்கு : 9'—3"— 10' – 7"—11"—5"
வயிரவருக்கு : 7'— 1" — 8'—3"—9'—3"

மேற்காட்டியவாறு அளவுகள் அமைந்தால் மக்களுக்கு, நாட்டுக்கு, ஊருக்கு மிகவும் உத்தமம் என்று ஆய்வாளர் ஸ்தபதி குறிப்பிடுவர். அந்த அளவுப்பிரமாணப் படியே எமது சிற்பாலயத்தினால், திருக்கேதீஸ்வரத்துப் பஞ்சரதங்களும் திருநெல்வேலிச்சிவன்தேர், இணுவில் சிவகாமியம்மன்தேர், முதலியனவும் நிர்மாணிக்கப்பட்டன. இதன்படியே ஆவரங்கால் சிவன் கோயில் தேரும், வல்வெட்டிவேவில் பிள்ளையார் தேரும் நிர்மாணிக்கப்படுகின்றன. தேர்த்திருப்பணி - ஒரு தெய்வீகப்பணி. □

உ
சிவமயம்

பண்டிதர் ச. சுப்பிரமணியம்

ஆவரங்காற் கொய்வளைப் பதியில் எழுந்தருளிய
ஸ்ரீ பர்வதவர்த்தனியம்மை சமேத நடராஜராமலிங்க சுவாமி

# திருவூஞ்சற் பதிகம்

காப்பு — விநாயகர் துதி

பூவரங்காள் புரிந்துறையும் ஆவ ரங்காற்
புதுமைபெறு பொற்கோயில் புகுந்து வைகித்
தேவரங்கில் திருமணஞ்செய் துமைபால் மன்னத்
தேசாரும் இராமலிங்கர், சிவமே சேர
மேவரங்கில் திருவூஞ்சல் வைகி ஆட
விளம்பிசைப்பா விமலர்செவி விருந்தாம் வண்ணம்
நாவரங்கில் நவின்றருள்க நம்பி போற்றும்
நாயகனே விநாயகனே நற்றாள் போற்றி.

திருவூஞ்சல் நூல்

நாற்பாதம் கால், நால்வர் நடுச்சேர் விட்டம்,
நன்னூலீ ரேழ்பலகை, நால்வர் வேதம்
மேற்பாவு தவிசு, அடியார் புராணம் மேலே
விசிகயிறா மிளிரூஞ்சல் மீதே வைக
ஏற்பான சிவபோத போக மென்ன
இருந்துமையோ டிராமலிங்க ஈச என்றும்
நாற்பால பயன்நல்க நயந்த உள்ளக்
கல்யாண சுந்தரநன் காடீர் ஊஞ்சல். 1

கவிகைமதி கதிரேந்தக், கமல மின்னார்
கவரிகொளக், கால்வருணன் வட்டந் தாங்க,
அவிகையிலா தவிர்வாள்கூற்று, அடைப்பை தோழன்,
அங்கிகா ளாஞ்சிகொள, அமரர் ஏனோர்
குவிகையொடு குற்றேவல் பிறவும் செய்யக்,
கோலமிகு கொய்வளைப்பூங் கோயில் கொண்டீர்
புவிகைதொழு பர்வதவர்த் தனிபால் மன்னப்
பூரணரே இராமலிங்க ஆடீர் ஊஞ்சல். 2

காதன்மணம் நிறைவாக்கும் கருத்தி னாலே
காசிவரை யாத்திரைசெய் கனவான் ராம
நாதன்மனம் நிரம்பவுடன் நடந்து வந்தே
நற்பதியா வரங்காற்கொய் வளையில் நண்ணி
ஈதன்மனத் தேற்பவருக் கெல்லாம் நல்க
இசைந்தருளி எழுந்தருளும் இராம லிங்க
வேதன்விதி வென்றடியார் விளங்கி வாழ
விளங்கிழையும் உடன்மேவ ஆடீர் ஊஞ்சல். 3

அரங்கான புறங்கான், நீர் அலைவாய்க் கங்கை,
அணிசாலி வயல்தோட்டம், அழகார் பூங்கா,
அரங்காடல் பாடலறா மாட கூடம்,
அரம்பைபலா மாகமுகார் அடவி, வாவி,
சிரங்காண லருஞ்சிகரி, தேரார் வீதி,
சேர்ந்தணிசெய் கொய்வளைசேர் தேவ! மின்னே
மருங்கான உமைமருங்கு மருவ எங்கள்
மருந்தாகும் இராமலிங்க ஆடிர் ஊஞ்சல். 4

மமதையுடன் அகந்தையென மருவும் தூணில்
மடுத்தமரு ளாம்வளையில் தொடுத்து விட்ட
சமதையுறும் இருவினைத்தாழ் வடங்கள் தாங்கும்
தனுவாய பலகையுயிர் தம்மை வைத்தே
தமதையுறத் தாலாட்டி ஊஞ்ச லாட்டும்
சதாசிவமே பசுபதியே தமியேம் உய்ய
எமதையெனும் நடராச இராம லிங்க
இறைவியுடன் இருந்தினிதே ஆடீர் ஊஞ்சல். 5

சேவரங்கொள் பதித்தேவ தேவ! அன்பர்
திருக்கண்டன் பரும்புபொடி திகழ்கண் ணீர்வார்
தாவரங்கள் தாமும்மலர் தழைகள் தாங்கித்
தலைதாழ்த்தி வடமாம்வண் டிசைப்பண் சாற்றி
ஏவருங்கண் டுளமுருக எதிர்கொள் சோலை
எழிலார்கொய் வளையிச! நாமம் ஏத்தும்
நாவரங்கார் பர்வதவர்த் தனிபால் நண்ண
நடராஜ ராமலிங்க ஆடீர் ஊஞ்சல். 6

மங்களங்கள் எண்ணிரண்டும் ஏந்தி ஏந்தி,
மண்ணவரும் விண்ணவரும் வாழ்த்தி வாழ்த்தி,
எங்களங்கந் தீர்த்தருளாய் என்றே என்றே,
ஏத்துமொலி எண்டிசையும் ஏற ஏறத்,
திங்களங்கார் திருமுடியெந் தேவ தேவ!
திருவடிதஞ் சென்னியுறத் தாழ்வார் வாழ்வான்,
எங்களம்மை இணைகோலம் காட்டிக் காட்டி,
எம்மிறைவ இராமலிங்க ஆடீர் ஊஞ்சல் 7

மதிநதிசேர் மணிமுடியெம் மானே ஆடீர்
மதிகதிர்தீ விழிமருந்தின் நம்ப ஆடீர்
அதிதுதிசேர் நீலமிடற் றடிகேள் ஆடீர்
அரிமழுமான் வரதாபய கரத்தீர் ஆடீர்
சதிபதியாம் சாம்பசிவ சாமீ ஆடீர்
சாந்திதரு கமலமலர்த் தாளீர் ஆடீர்
கதியுதவு பார்வதியும் கலந்து வைகக்
கருணைபொழி இராமலிங்க ஆடீர் ஊஞ்சல். 8

மாயமல மயக்கொழிய ஆடீர் ஊஞ்சல்
மருவுமிரு வினைமாய ஆடீர் ஊஞ்சல்
ஆயபசு போதமுற ஆடீர் ஊஞ்சல்
ஆணவவேர் விட்டகல ஆடீர் ஊஞ்சல்
தூயகுரு துணைகூட ஆடீர் ஊஞ்சல்
துரியசிவ சோதியுற ஆடீர் ஊஞ்சல்
நாயகியாம் பார்வதியும் மருங்கு நண்ண
நடராஜ ராமலிங்க ஆடீர் ஊஞ்சல். 9


கண்சுமந்த நுதலீர்! பொன் னூஞ்சல் ஆடீர்
கந்தனைமுந் துகந்தீர்! பொன் னூஞ்சல் ஆடீர்
எண்சுமந்த சிதம்பர! பொன் னூஞ்சல் ஆடீர்
ஏத்தவருள் முத்தா! பொன் னூஞ்சல் ஆடீர்
விண்சுமந்த காசிய! பொன் னூஞ்சல் ஆடீர்
விடமணியாம் மிடற்றீர்! பொன் னூஞ்சல் ஆடீர்
பெண்சுமந்த வாமா! பொன் னூஞ்சல் ஆடீர்
பெரும! இராமலிங்கா! பொன் னூஞ்சல் ஆடீர். 10

வாழி விருத்தம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வாழ்க வைதிக சைவம் மறைமுறை
வாழ்க செந்தமிழ் ஐந்தெழுத் தக்கணி
வாழ்க வையகம் மாமகம் வான்மழை
வாழ்க ஆவரங் கால்கொய் வளைத்தலம்
வாழ்க பார்வதி ராமலிங் கேசுரர்
வாழ்க சீரடி யார்செய் பணிகுடி
வாழ்க மன்னுயிர் மங்கள பூதியே.

சுபம் அஸ்து நித்தியம்

# சித்திரத் தேருக்கோர் தேர்ச்சித்திர வெண்பா




தென்னன் திகழ்புரங்கள் தீப்புலிங்கம் சேர்த்தமரர்
துன்னங்கி மாதேராய்த் தூண்டினான் - மின்னன்னாள்
முன்ன நடங்காண ஆட நமக்கின்பே
மன்நடன ராமலிங் கன்

—பண்டிதர் ச. சுப்பிரமணியம்



ஆவரங்கால் ஸ்ரீ பர்வதவர்த்தனி சமேத ஸ்ரீ நடராஜராமலிங்க சுவாமிக்குரிய
சித்திரத்தேரின் தலைமைப் படைப்பாளியான
திரு. ஜீவரத்தினம் ஜெயப்பிரகாஸ் சிற்பப்பிரகாஸ்



வண்ணத் தேரின் உள்ளே பந்தலின் வண்ணம்



திரு. சி. பாஸ்கரன் அவர்கள்

சித்திரத் தேரின் கலசம், மணிகள், பித்தளை வேலைப்பாடுகளைச் செய்து சிற்பக் கலையையும் தேரின் வடிவமைப்பையும் பிரகாசிக்கச்செய்தவர்.

## எச்சரிக்கை

பானெய்அபி டேகம்மகிழ் பரனே — எச்சரிக்கை
பருவதவர்த் தனிபங்குடை வரனே — எச்சரிக்கை
மானைம்மழு வுடனேந்தியபரதா — எச்சரிக்கை
மன்றாடிய மருந்தேமணி மிடறா — எச்சரிக்கை 1

மலையின்மலை போல்மாணிக்க மலையே — எச்சரிக்கை
மறலிம்மறம் அறமாற்றிய வலனே எச்சரிக்கை
தலையில்தலை மாலைதரி தலைவா — எச்சரிக்கை
தசமாமுகன் தருக்கோட்டிய கழலா எச்சரிக்கை 2

வில்லாமலை தனையேந்திய விகிர்தா — எச்சரிக்கை
விசயன்தனி வில்லாண்மைகொள் விசயா — எச்சரிக்கை
நல்லாண் மலை நங்கைக்கொரு நம்பீ — எச்சரிக்கை
நடராசரா மலிங்கேசுர நம்பா — எச்சரிக்கை 3

## பராக்கு

திங்களணி செஞ்சடைய தேவா — பராக்கு
தினகரனில் ஒளிமிக்க தேசா — பராக்கு
அங்கமலத் தயன்சிரங்கொள் கரனே — பராக்கு
அரிநார ணன்பணியும் அரனே — பராக்கு 1

அன்றால நீழலமர் குருவே — பராக்கு
ஆலாலம் உண்டவமு துருவே — பராக்கு
நின்றால வனத்தாடு நிமலா — பராக்கு
நெஞ்சால யத்துநிறை விமலா — பராக்கு 2

வஞ்சநடை யார்பாலில் வாராய் — பராக்கு
வாய்மைநெறி வாழவரந் தாராய் பராக்கு
நைஞ்சவிடை நாயகிச மேதா — பராக்கு
நடராச ராமலிங்க நாதா பாரக்கு 3

# மங்களம்

சுந்தபரி பூரணர்க்கு மங்களம் — தூய்ய
சோதிவடி வானவர்க்கு மங்களம்
அத்தியுரி போர்த்தவர்க்கு மங்களம் — அன்னை
அம்பிகையொர் பாகருக்கு மங்களம். 1

முப்புரமும் எய்தவர்க்கு மங்களம் — பாசம்
மூன்றுமறச் செய்பவர்க்கு மங்களம்
எய்ப்பினில்வைப் பாயவர்க்கு மங்களம் — யாவும்
ஈன்றவருட் டாயவர்க்கு மங்களம். 2

பாதநிழல் தருபவர்க்கு மங்களம் — நங்கை
பார்வதிச மேதருக்கு மங்களம்
நாதர்கொய் வளையருக்கு மங்களம் — நட
ராசரா மலிங்கருக்கு மங்களம். 3

மங்களம் சுப மங்களம்

விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் குணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே.

— அப்பர்சுவாமிகள்

உ
சிவமயம்

பண்டிதர் ச. சுப்பிரமணியம்

ஆவரங்கால் கொய்வளையில் எழுந்தருளிய

# ஸ்ரீ பர்வதவர்த்தனி அம்மை

# திருவூஞ்சற் பதிகம்

காப்பு

ஆத்தாள் எங்கொய்வளைப் பர்வத வர்த்தனி அம்மை எம்மைக்
காத்தாள் இராமலிங் கேசர் கருணை உருக் கவுரி
ஏத்தால் உயர்திரு ஊஞ்சலில் ஆட இசைக்க நல்ல
பாத்தா எனமுன் கணபதி பாதம் பரவுதுமே.

திருவூஞ்சல்நூல்

திருமறைகால், சிரம்பலகை, அங்கம் விட்டம்,
செறிகயிறு தந்திரமாய்த் திகழூஞ் சல்மேல்
மருவமளி ஓங்காரத் தொனியாய் மன்னி
மலர்மடவார் மருங்குவடம் பிடித்தே ஆட்ட
முருகனொடு முன்னவனும் இருபால்மேவ
முதல்வனருட் கொய்வளையான் மூன்று கண்ணும்
பருகமிர்தப் படிவத்தீர் ஆடீர் ஊஞ்சல்
பர்வதவர்த் தனியம்மே ஆடீர் ஊஞ்சல் 1

கந்தருவர் கின்னரர்கள் கானம் ஓங்கக்
கவிவாணர் கவிமழைசந் நிதியில் தேங்க
அந்தரர்கள் அருமுனிவர் வேதம் பாட
அரம்பையர்கள் அரியசதி பிழையா தாட
வந்துதொழும் அன்பர்களி வளர்ந்தே ஆட
வாணிதிரு மகளிருபால் வடமீர்த் தாட்டப்
பந்தணைமென் விரலீர்கொய் வளையிற் பற்றார்
பர்வதவர்த் தனியம்மே ஆடீர் ஊஞ்சல். 2

ஆங்காரக் கிழங்ககழ்ந்தார் அகத்தே ஃதாற்றும்
    அருண்ஞான விளக்கே!ஆ கமவா ரண்யத்(து)
ஆங்காடு 'மயிலே!வே தாந்தப் பூங்கா
    அகமமர்ந்து கூங்குயிலே! அனைத்தின் மேலாம்
ஓங்காரக் கூட்டுறைஅஞ் சுகமே! உள்ளம்
    உருக்கன்புப் பாலுண்ணும் அனமே! எங்கள்
பாங்காகக் கொய்வளையாம் பதியில் வாழும்
    பர்வதவர்த் தனியம்மே ஆடீர் ஊஞ்சல் 3

திருவாரும் செந்தமிழ்த்தீஞ் சுவையே! தெய்வத்
    திருமறைநூற் றெளிவே! பொன் இமயவெற்பில்
உருவாய ஒளிமணியே! உலகம் பூத்த
    ஒப்பரிய மலர்க்கொடியே! ஒருவன் உண்ட
இருளாய நஞ்சமுதா இயற்ற வல்ல
    இன்னமுதே! கொய்வளையில் இராம லிங்கர்
அருளாய பர்வதவர்த் தனியே அம்மே
    அகிலாண்ட நாயகியே ஆடீர் ஊஞ்சல். 4

உலகமெலாம் சிற்றிலென உதவி ஆங்கே
    உயிர்களையும் பாவையென உதிப்பித் தாட்டி
அலகிலா நுகர்ச்சியெலாம் சிறுசோ றாக
    அட்டவற்றுக் கூட்டிவிளை யாடும் கன்னீ!
நிலவுலாஞ் சடைநிமலர் நிருத்தத் தைந்தாய்
    நிகழ்கிரியை எமைநேர நோக்கும் மானே!
பலமெலாந் தரும்பரையே ஆவரங்காற்
    பர்வதவர்த் தனியம்மே ஆடீர் ஊஞ்சல். 5

முருகனது குறிஞ்சிக்கும் முகுந்தன் மேய
    முல்லைக்கும் நடுப்பாலை பாலை யாந்தாம்
பெருகருளால் அமர்ந்தருளாம் பெயலால் ஆற்றும்
    பெருமாட்டீ பிறைசூடி பிரியா துற்றீர்
தருவனமார் ஆவரங்கால் தலமாய்ச் சாந்தி
    தழைகோயில் கொய்வளையே சார்ந்து வாழும்
பருவதவர்த் தனியம்மே ஆடீர் ஊஞ்சல்
    பயன்நான்கும் 'பயந்தருள ஆடீர் ஊஞ்சல். 6

உள்ளுவார் உளத்துறையும் உமையே! எந்தைக்(கு)
    உயிருடலாய் உரிமைகொளும் அனையே!சேந்தன்
விள்ளுமத வேழமுகன் தமைமுன் ஈன்ற
    வித்தகியே! வெற்பரசன் மகளே! மாயன்
கொள்ளவரு சோதரியே! குறையொன் றில்லாக்
    குணநிறைவே! ஆவரங்காற் கொய்வளைக்கண்
பள்ளமுறு நீர்போலப் பாய்ந்து நிற்கும்
    பர்வதவர்த் தனியம்மே ஆடீர் ஊஞ்சல். 7

பாண்டியனார் பாலகியாய்த் திசைகள் வென்றீர்
பயில்கயிலை மலையாளி வாகும் கொண்டீர்
பாண்டியனாய்ப் பாராள அரனை வைத்தீர்
பரனருளத் தடாதகையாய்ப் பயின்றீர் பண்டே
பாண்டியனைக் கூனிமிர்த்த பாலன் உண்ணப்
பரஞானப் பாலளித்தீர் பணிகின் றோர்க்குப்
பாண்டியராம் பதந்தருகொய் வளையாய் மாண்பார்
பர்வதவர்த் தனியம்மே ஆடீர் ஊஞ்சல் 8

சொற்கொடியும் மலர்க்கொடியும் வடந்தொட் டாட்டச்
சுடர்க்கொடிநேர் தோழியர்கள் கவரி வீசப்
பொற்கொடியாந் தமிழ்க்கொடியைப் புரந்த தென்னர்
புகழ்க்கொடியே குலக்கொடியே புவிமேல் வந்தே
விற்கொடியும் புலிக்கொடியும் வென்றீர் மீன
வெல்கொடியான் கொடிவிரவி ஆட வெற்பன்
நற்கொடியே பர்வதவர்த் தனியே எந்தை
நடராஜர் நயப்பவினி தாடீர் ஊஞ்சல். 9

சிரமதனிற் பிறையாட ஆடீர் ஊஞ்சல்
சிறியபிறை நுதல்வியர்ப்ப ஆடீர் ஊஞ்சல்
வரமுகமண் டலம்மலர ஆடீர் ஊஞ்சல்
வார்குழைகள் மாறாட ஆடீர் ஊஞ்சல்
உரமணியும் வடமாட ஆடீர் ஊஞ்சல்
உறுமரைமே கலையார்ப்ப ஆடீர் ஊஞ்சல்
பரவுமறைச் சிலம்பார்க்க ஆடீர் ஊஞ்சல்
பர்வதவர்த் தனியம்மே ஆடீர் ஊஞ்சல். 10

வாழிவிருத்தம்

வாழிகொய் வளையில் வாழும் பார்வதி அம்மை வாழி
வாழியா வரங்கால் மக்கள் அடியவர் நீடு வாழி
வாழிவை திகஞ்சீர்ச் சைவம் மாநிலம் வளஞ்சு ரக்க
வாழிய உலகமெல்லாம் மழைவளம் பெருக மாதோ.

## எச்சரிக்கை

அம்மாவருள் ஆனந்தியெம் தாயே — எச்சரிக்கை
ஆராவமு தீசரகத் தாயே — எச்சரிக்கை
எம்மாருயிர்க் காதாரம தாவாய் — எச்சரிக்கை
எண்ணும் அபி ராமியெமைக் காவாய் - எச்சரிக்கை. 1

பாலாருல கோடேயுயிர் ஈன்றாய் — எச்சரிக்கை
பரமர்க்கிடப் பாலேயமர் சான்றே — எச்சரிக்கை
நாலாம்மறை நாடித்துதி நங்காய் — எச்சரிக்கை
நடராஜரா மலிங்கர்க்கிடப் பங்காய் — எச்சரிக்கை. 2

சீராவரங் காற்கொய்வளை அன்னாய் — எச்சரிக்கை
தேரும்மர கதவல்லியே அன்னாய் — எச்சரிக்கை
பேராவரம் பலவும்தரு பிடியே — எச்சரிக்கை
பேணாவசு ரேசர்க்கடி இடியே — எச்சரிக்கை. 2

## பராக்கு

திங்கள்வழி வந்தவருள் மங்காய் — பராக்கு
செந்தமிழை ஓம்பிவரு நங்காய் — பராக்கு
சங்கரர்தம் அங்கமமர் தையால் — பராக்கு
சாந்திநிலை தந்தருளுங் கையாய் — பராக்கு. 1

கந்தனைவி நாயகனை ஈன்றாய் — பராக்கு
காலமெலாம் காத்தருள ஏன்றாய் — பராக்கு
சிந்தனையில் வந்துதிக்கும் உருவே பராக்கு
சிட்டிதிதி சங்காரக் கருவே — பராக்கு. 2

சர்வமுமாய் நின்றருளும் சத்தி — பராக்கு
சந்தமறை ஆகமநூல் முத்தே — பராக்கு
பர்வதவர்த் தனியமிர்த வல்லீ — பராக்கு
பாங்குமிகு கொய்வளையெஞ் செல்வீ — பராக்கு 3

## மங்களம்

அத்திமுகத் தைங்கரற்கு மங்களம் — தம்பி
ஆறுமுகத் தெம்பரற்கு மங்களம்
முத்திதரும் ஐமுகற்கு மங்களம் — நல்ல
முதல்வியுமை பார்வதிக்கு மங்களம். 1

தாரகனைச் சாடினர்க்கு மங்களம் — மகி
டாசுரனைச் சாய்த்தவர்க்கு மங்களம்
பூரணியெம் புங்கவிக்கு மங்களம் — தன்னைப்
போற்றவருள் பூப்பவர்க்கு மங்களம். 2

ஆவரங்கால் இராமலிங்க மங்களம் — என்றும்
அறம்வளர்க்கும் நாயகியே மங்களம்
பாவரங்கில் நர்த்தகியே மங்களம் — எங்கள்
பர்வதவர்த் தனிதாயே மங்களம். 3
மங்களம் சுப மங்களம்

# நடராஜ தத்துவம்

'சிவத்துக்கு' இருவித நிலையுண்டு. ஒன்று எல்லாவற்றையும் கடந்தது. மற்றொன்று எல்லாவற்றிலும் கலந்தது. முன்னையது சொரூபம் என்றும் நிர்க்குணம் என்றும், பின்னையது தடத்தம் என்றும் சகுணம் என்றும் வழங்கப்படுகின்றன.

எல்லாவற்றையும் கடந்த சிவத்துக்கு உருவம், அருவம், ஐந்தொழில் முதலியன இல்லை. இது, ''சிவனுரு அருவுமல்லன், சித்தினோடசித்துமல்லன். பவந்தரு தொழில்களொன்றும் பண்ணிடு வானுமல்லன்'' எனவரும் சிவஞான சித்தியார் செய்யுளில் (70) வலியுறுத்தப்படுகிறது.

சிவன் இயற்கையோடு இயைந்து நிற்கும் நிலையே எல்லாவற்றிலும் கலந்த நிலை. சிவம் அறிவுப் பொருள். இயற்கை சடப்பொருள். சிவம் இயற்கையுடன் கலந்த நிலையில் இயக்கம் – அசைவு உண்டாகிறது. தனித்த சிவத்துக்கும், தனித்த இயற்கைக்கும் இயக்கம் கிடையாது.

சிவம் தனித்தும் இயற்கையுடன் கலந்தும் நிற்கும் இயல்புடையது. இயற்கை தனித்து நில்லாது. அது சிவத்துடன் கலந்தே இயங்கும் இயல்பு வாய்ந்தது. சிவமும் இயற்கையும் கலந்த நிலையை விளக்கும் கலையாகச் சிதம்பரம் உள்ளது. சிதம்பரம் என்னும் கோயில் வெறும் கல்லன்று, மண்ணன்று, சுவரன்று, கட்டிடமன்று. இது மூன்று காண்டங்களையுடையது. ஒன்று ஞானசபை; மற்றொன்று நடராஜமன்று; இன்னொன்று சிவகாமிப் பொது. ஞானசபை சிவத்தின் கடந்த நிலையை அறிவுறுத்துகிறது. சிவகாமி வடிவம் இயற்கையன்னையின் அறிகுறியாக விளங்குகிறது. கடந்த சிவம் இயற்கைச் சிவகாமியுடன் கலந்துள்ள நிலையில் எழும் இயக்கத்தை உணர்த்துகிறது. அதுவே நடராஜ ஓவியம், என்பர் கல்யாணசுந்தர முதலியார்.

நன்றி: இந்து நாகரிகத்திற் கலை

உ
சிவமயம்

— தேர்த்திருப்பணிச் சபையினர்

## நன்றி நவில்கிறோம்

ஆவரங்கால் சிவன் கோயிலில் ஊர் கூடித்தேர் இழுக்கும் வேளையில் அம்மையப்பருக்கு அத்தேர் உருவாக்க காரணர்களான யாவரையும் நன்றியோடு நினைக்கின்றோம்.

வெளிநாடுகளில் வாழும் நம் நாட்டுச் சிவநேயச் செல்வர்கள் பொருட் செல்வத்தை அள்ளி வழங்கினார்கள். அவர்களுக்கு அப்பணின் அருட்செல்வம் நிறையவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்

அழகிய சித்திரத்தேரை உருவாக்கி வழங்கிய சிற்பககலைஞர் சீ. ஜெயப்பிரகாஷ் அவர்களுக்கும் உடன்பணியாற்றிய கலைஞர்களுக்கும் வழிகாட்டி நின்ற சிற்பரத்தினம் ஆ. சீவரத்தினம் அவர்களுக்கும் தேர்க் கொட்டகை வேலைகளை நிறைவேற்றிதந்த, றூளின்ஸ் நிறுவனத்தினருக்கும், வெள்ளோட்ட விழா சிறப்புற பல்லாற்றாலும் உதவிய அனைவருக்கும் இன்று பெரும் திரளாகக் கூடிநிற்கும் பக்தர்களுக்கும்,

எல்லாவகையிலும் ஒத்துழைப்பு வழங்கிவரும் ஆவரங்காற் பதி வாழும் அன்பர்களுக்கும் நன்றி கூறிச் சிவபரம்பொருளின் பேரருள் கிட்ட வேண்டுமெனப் பிரார்த்தித்து அமைகின்றோம்.

நன்றி வணக்கம்.

பதிவு இல.
J/VC/43/CC 695

28 JUL
2124
04 AUG 20
212
JUL 2019

## ஆவரங்கால் சிவன்கோவில்

# சித்திரத் தேர்

### வெள்ளோட்ட விழா மலர்

வெளியீடு

தர்மகத்தா சபையும், தேர் திருப்பணிச் சபையும்



PRINTED BY UNIE ARTS (PVT) LTD. TEL.: 330195